Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37 கதிர் : 19 | புதன்கிழமை 15 டிசெம்பர் 2021 | கார்த்திகை 29 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16 | விலை: 30/=



**கொரோனா**
நேற்று 726
மொத்தம் 5,76,194

**உயிரிழப்பு**
நேற்று 20
மொத்தம் 14,661

# '13' ஐ ஆதரிப்போர் பச்சைத் துரோகிகளாம்!

## சொல்கிறார் கஜேந்திரகுமார் எம்.பி.



யாழ்ப்பாணம், டிசெம்பர் 15

"தமிழ் மக்களை ஒற்றையாட்சிக்குள் முடக்க நினைக்கும் இந்தியாவின் 13ஆம் திருத்தத்தை நாம் ஒருபோதும் ஏற்க மாட்டோம். '13' மூலம் இந்தியா கொண்டுவரும் ஒற்றையாட்சியை ஆதரிப்பவர்கள் பச்சைத் துரோகிகள்" என்று, அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார். 15

## இரண்டாவது மீனவரும் சடலமாக மீட்பு

மன்னார், டிசெ. 15

மன்னார் கோந்தைப்பிட்டி கடற்பரப்பில் காணா மற்போன இரு மீன 15



## யாழ்ப்பாணத்தில் 3 இடங்களில் நேற்றும் வெடிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 15

வடமராட்சி, பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில், உணவு தயாரிப்பு இடத்தில் நேற்றுக்காலை எரி 15

## தமிழர்களின் தேசத்திலேயே தமிழுக்கு இடமில்லையா?

### ஆளுநரின் கூட்டத்தைவிட்டு வெளியேறினார் சிறீதரன் எம்.பி.

யாழ்ப்பாணம், டிசெ. 15

வடக்கு மாகாண ஆளுநர் நேற்று நடத்திய கூட்டத்தில் தமிழ்மொழிக்கு இடமில்லாத காரணத்தால் கூட்டத்தில் கலந்துகொள்ள விரும்பவில்லை எனத் தெரிவித்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் வெளியேறினார். வடக்கு மாகாணத்தின் நிலைமைகள் தொடர்பி 15



எலும்புக்கூடு வெளிவந்த

## முகமாலையில் இன்று அகழ்வு

கிளிநொச்சி, டிசெ. 15

முகமாலையில், எலும்புக்கூடு அடையாளம் காணப்பட்ட பகுதியில், இன்று காலை அகழ்வாராய்வு இடம்பெறவுள்ளது. போர் இடம்பெற்ற காலத்தில், 15

## காய்ச்சலால் யாழில் தாயொருவர் சாவு

கிளிநொச்சி, டிசெ. 15

காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்த மூன்றுபிள்ளைகளின் தாயார், நேற்று உயிரி 15

மணிவண்ணன் அணிவசமிருக்கும்

## யாழ்.மாநகர சபையில் இன்று பட்ஜெட் பலப்பரீட்சை!

- கூட்டமைப்பு எதிர்ப்பு
- ஈ.பி.டி.பி. ஆதரவு
- வெற்றி யாருக்கு?

யாழ்ப்பாணம், டிசெ. 15

யாழ்ப்பாணம் மாநகர சபையின் அடுத்த ஆண்டுக்கான பாதீடு, 15

முச்சந்தி முரளி




புலிகள் பயன்படுத்திய

## துப்பாக்கியுடன் ஒருவர் கைது

அம்பாறை, டிசெ. 15

அம்பாறை, காரைதீவு கொம்புச் சந்தி பகுதியில் தமிழீழ விடுதலைப்புலிகள் பயன்படுத்தினர் என்று 15

## மத்திய வங்கி மீது சட்டத்தரணிகள் ரிட் மனுத் தாக்கல்

கொழும்பு, டிசெ. 15

இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், இலங்கை மத்திய வங்கி மீது மேன்முறையீட்டு நீதிமன்றில் ரிட் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளது. வங்கிக்கணக்குகளி 15




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2,174 பேர் தொற்றாளர்கள்

சாவகச்சேரி, டிசெ. 15
தென்மராட்சி பிரதேசத்தில் நேற்றுவரை 2 ஆயிரத்து 174 பேர் கொரோனாத் தொற்றுக்கு இலக்காகியுள்ளனர்.
தொற்றுக் கண்டறியப்பட்டவர்களில் 65 வயதுக்கு மேற்பட்டவர்கள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர். (ஓ-9)

# வடக்கு - கிழக்கு இணைப்பால் குடியேற்றத்தை தடுக்க முடியாது

### இரா.சாணக்கியனை சாடுகிறார் கஜேந்திரன் எம்.பி.

கொழும்பு, டிசெ. 15

**சிங்கள மயமாக்கத்தையோ பௌத்த மயமாக்கத்தையோ தடுக்க முடியாத நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், மக்களை ஏமாற்றுவதற்காக வடக்கு - கிழக்கு இணைந்த முதலமைச்சர் என்ற விடயத்தைத் தெரிவித்து, தொடர்ந்து ஏமாற்ற மக்கள் ஏமாளிகள் அல்லர்- இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.**

அம்பாறை மாவட்டத்தில் பாண்டிருப்புப் பகுதியில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.
மேலும் அவர் தெரிவித்ததாவது,
தமிழர் தாயகத்தில் இடம்பெறுகின்ற பௌத்தமயமாக்கல், சிங்கள மயமாக்கல் போன்ற செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்தாவிடின் தமிழர் தேசத்தின் இருப்பை நாங்கள் பாதுகாக்க முடியாது என்பதை மக்கள் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்.
இவ்வாறான விடயங்கள் தடுத்து நிறுத்தப்பட வேண்டுமாயின் தமிழர் தேசத்தின் இறைமை என்பது அங்கீகரிக்கப்பட வேண்டும். தமிழர்களின் சுயநிர்ணய உரிமை போன்று ஒரு சுயாட்சி எட்டப்பட வேண்டும்.
இவ்வாறு இல்லாமல் வெறுமனே வடக்கு - கிழக்கை இணைப்பதன் ஊடாக மாத்திரம் இந்த குடியேற்றங்களையோ அல்லது பௌத்தமயமாக்கல் விடயங்களையோ தடுத்து நிறுத்த முடியாது.
ஏனெனில் அதிகாரம் முழுவதும் அவர்களது (அரசு) கைகளிலே உள்ளது. அதேவேளை, வடக்கு கிழக்கு இணைக்கப்பட்டிருந்தாலும் அங்கு ஆளுநருக்குத்தான் அதிகாரம்.
அதேபோன்று அந்த ஆளுநருக்குக் கீழுள்ள உத்தியோகத்தர்கள் ஆளுநரின் கட்டளைப்படிதான் நடப்பார்கள். மக்களால் தெரிவு செய்யப்பட்ட சபையில்கூட, முதலமைச்சரின் செயலாளரையும் ஆளுநர்தான் நியமிப்பார். அங்கே சகல கட்டுப்பாடுகளும் ஆளுநரின் கீழ்தான் இருக்கும். ஆகவே, மக்களின் வாக்குகளைப் பெறுவதற்காக பல்வேறு கருத்துக்களைக் கூற முடியும்- என்றார். (ம-ஓ-22)

## மின் விநியோகம் இனி வழமைக்கு

கொழும்பு, டிசெ. 15
நாட்டின் எந்தப் பகுதிகளிலும் மின்சார விநியோகம் தடைப்படாது என்று இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது. நுரைச்சோலை மின்னுற்பத்தி நிலையத்தில் செயலிழந்த மின்பிறப்பாக்கியை வழமைக்குக் கொண்டு வரும் தொழிற்பாடுகள் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளன. அதனால் நேற்று முதல் மின்சார விநியோகம் வழமைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4-இ)

## யுகதனவி ஒப்பந்தம் காட்டிக்கொடுப்பே!

### பொதுஜன பெரமுன எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ.15
கெரவலப்பிட்டிய யுகதனவி மின் உற்பத்தி நிலையத்தின் 40 வீத பங்குகளை அமெரிக்க நிறுவனத்துக்கு மாற்றும் ஒப்பந்தம் தேசத்தைக் காட்டிக்கொடுக்கும் ஒப்பந்தமாகும்.
இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி குற்றஞ்சுமத்தினார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: உடன்படிக்கையைக் கைச்சாத்திட அனுமதித்த அனைத்து அமைச்சரவை அமைச்சர்களும் இலங்கையின் எதிர்காலத்துக்குத் துரோகம் இழைத்த குற்றவாளிகளாவர்.
இந்த உடன்படிக்கை இரகசியமாக கைச்சாத்திடப்பட்டமைக்குத் தெளிவான ஆதாரம் கிடைத்துள்ளது.
தகவல் அறியும் உரிமைச் சட்டம் இன்னும் செல்லுபடியாகும் என்பதால், சட்டமா அதிபரிடம் இருந்து மறைத்து கையெழுத்திட்ட ஒப்பந்தம் அரசியல் சாசனத்தை மீறுவதாக உள்ளது.
நாட்டுக்குத் துரோகம் இழைத்தவர்கள் ஜனாதிபதியால் வெளிக் கொணரப்படவேண்டும். பதவியில் இருந்தாலும் தண்டிக்கப்பட வேண்டும் - என்றார். (எ-22)

## அமெரிக்கா செல்கிறார் பஸில்?

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச அமெரிக்கா புறப்பட்டுச் செல்லவுள்ளார் என்று தென்னிலங்கை ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.
அதேவேளை, இது தொடர்பில் உத்தியோகபூர்வமாக இதுவரை எந்தத் தகவலும் வெளியாகவில்லை.
2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்துவிட்டு, விவாதம் நடைபெற்றுக் கொண்டு இருக்கும்போது, பஸில் ராஜபக்ச இந்தியா சென்று வந்தமைபெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்த நிலையில், அவர் இப்போது அமெரிக்கா செல்லவுள்ளார் -என்று கூறப்படுகின்றது. (எ-இ)

## முதலீடுகளை ஈர்க்க அரசு புதிய திட்டம்!

### ஷெஹான் சேமசிங்க தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.15
வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்கும் வகையில் அரசு புதிய வேலைத் திட்டத்தை ஆரம்பித்துள்ளது என்று இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது, உலகின் 35 வீத முதலீடுகள் குறைந்துள்ளன.
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் அரசு கடன் வீதத்தை 72 வீதத்தால் குறைத்துள்ளது.
முன்னாள் நிர்வாகம் பல கடன்களை பெற்றுள்ளது.
கடனைத் திருப்பிச் செலுத்தும் செயற்பாடுகளை சீர்குலைத்துள்ளது -என்றார். (எ-இ)

### யாழ்ப்பாண மாவட்டத்தில்

## கடற்றொழில் அபிவிருத்திக்கு 22.9 மில்லியன் நிதி ஒதுக்கீடு

கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தால், 22.9 மில்லியன் நிதி ஒதுக்கீட்டில், யாழ்ப்பாணத்தில் பல்வேறு அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.
அதற்கமைவாக கடற்கரையை அண்டிய பகுதிகளில் மின் விளக்குகளைப் பொருத்துதல், படகுத்தரிப்பிடங்கள், மீன் கழிவுத்தொட்டி அமைத்தல் போன்ற திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.
சங்கானை பிரதேச செயலர் பிரிவில் அராலி மத்தி, அராலி தெற்கு, அராலிமேற்கு, அராலி கிழக்கு பகுதிகளிலும், காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் ஊரி, பழவோடை, தோப்புக்காடு, பிட்டியெல்லை பகுதியிலும், நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் பூம்புகார் பகுதிகளிலும், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் காக்கைதீவு, சாவற்கட்டு பகுதிகளிலும், சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் தனங்களப்பு, கோவில் குடியிருப்பு, கச்சாய், கைதடி, நாவற்குழி தெற்கு பகுதிகளிலும், யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் குருநகர், நாவாந்துறை, கொழும்புத்துறை, பாஷையூர் கிழக்கு ஆகிய பகுதிகளிலும் அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ம-4-125)

# சம்பிக்கவின் கடவுச் சீட்டை விடுவிக்க நீதிமன்று உத்தரவு



நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவின் கடவுச்சீட்டு தற்காலிகமாக விடுவிக்கப்படுகின்றது என்று கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டது.
கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி தமித் தொட்டவத்த முன்னிலையில் நேற்று மனு ஒன்றைத் தாக்கல் செய்த பாட்டலி சம்பிக்க ரணவக்கவின் சட்டத்தரணிகள், தனது கட்சிக்காரர் பெப்ரவரி மாதம் வெளிநாடு செல்ல உள்ளார் என்றும், தற்போது நீதிமன்ற பாதுகாப்பில் உள்ள அவரது கடவுச்சீட்டை தற்காலிகமாக விடுவிக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்திருந்தனர்.
இந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட உயர்நீதிமன்ற நீதிபதி கடவுச்சீட்டை தற்காலிகமாக விடுவிக்க உத்தரவிட்டுள்ளார். 201 ஆம் ஆண்டு ராஜகிரிய பகுதியில் ஏற்பட்ட விபத்தில் இளைஞன் ஒருவனை பலத்த காயமடையச் செய்த குற்றச்சாட்டு தொடர்பில் முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்குக்குப் பிணை வழங்கப்பட்ட சந்தர்ப்பத்தில் அவரது கடவுச்சீட்டை நீதிமன்ற பாதுகாப்பில் வைக்க உத்தரவிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒமிக்ரோன் பரவாது என்று உத்தரவாதம் தரமுடியாது

## பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் எச்சரிக்கை



**கொழும்பு, டிசெ.15**

**'ஒமிக்ரோன்' வைரஸ் இலங்கையில் பரவாது என்ற உத்தரவாதத்தை எம்மால் வழங்க முடியாது. எனவே, அனைவரும் பூஸ்டர் தடுப்பூசியை கட்டாயம் பெற்றுக்கொள்ளவேண்டும்.**

இவ்வாறு பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவர் ஹேமந்த ஹேரத் நேற்றுத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஒமிக்ரோன் பிறழ்வு உலகெங்கிலும் வேகமாக பரவிவருகின்றது. இந்த வைரஸ் திரிபு பரவலைக் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் இலங்கையில் முன்னெடுக்கப்பட்டிருந்தாலும், அந்த வைரஸ் திரிபு இலங்கையில் பரவாது என்ற நூறுவீத உத்தரவாதத்தை எம்மால் வழங்கமுடியாது.

அவ்வாறானதொரு நிலைமை ஏற்பட்டால் அதிலிருந்து தமது உயிரைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டுமெனில் மூன்றாவது தடுப்பூசியை பெறவேண்டியது கட்டாயம்.

அவ்வாறு பெறுவதன்மூலம் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியும். சமூகத்தில் பரவு வீதத்தையும் குறைத்துக்கொள்ளலாம்.

ஏனெனில் உடலில் நோய் எதிர்ப்புச்சக்தி அதிகமாக இருந்தால், வைரஸின் பரவும் அளவு குறைவாகவே இருக்கும் - என்றார். (எ-44)

---

எரிவாயு அடுப்பு வெடிப்பு;

# பாதிக்கப்பட்டோருக்கு இலவச சட்ட உதவி

கொழும்பு, டிசெ. 15

நாடுமுழுவதும் எரிவாயு வெடிப்பால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் ஐக்கிய மக்கள் சக்தி இலவச சட்ட உதவியை வழங்கும் என்றும், அதற்காக எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம் தயாராக உள்ளதாகவும் - எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

'தரம் இல்லாத அரசைக் கொண்ட நாட்டில் தரமான எதையும் எதிர்பார்க்க முடியாது.

தரமற்ற ஆட்சியை அகற்றுவதே மேற்கொள்ளவேண்டிய விடயம். தரமற்ற உர இறக்குமதியால் நாடு பெரும் பேரழிவுக்குள் தள்ளப்பட்டுள்ளது. நாட்டின் பொருளாதாரத்தையும், விவசாய சமூகத்தின் வாழ்க்கையையும் அரசு ஆபத்தில் ஆழ்த்தியுள்ளது' - என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். (ஒ-இ)

---

# நாடாளுமன்றை ஒத்திவைக்க ஜனாதிபதிக்கு அதிகாரமுண்டு!

## அரச தரப்பு விளக்கம்

கொழும்பு, டிசெ. 15

ஜனாதிபதி அதிகாரத்தைப் பயன்படுத்தியே நாடாளுமன்று ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இது அவசர தீர்மானம் இல்லை என்று வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

1978ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை இலங்கையின் அனைத்து ஜனாதிபதிகளும் இந்த அதிகாரத்தைப் பயன்படுத்தும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர். அரசமைப்பின் 70ஆவது உறுப்புரையின் முதலாவது உப உறுப்புரையின் கீழ், நாடாளுமன்றைக் கலைக்க, கூட்டுவதற்கு, இறுதி அமர்வை நிறைவு செய்ய அதிகாரங்கள் பகிரப்பட்டுள்ளன. இந்த நிலையில் ஜனவரி மாதம் வெளிநாட்டுக் கடனைச் செலுத்த விருப்பதால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று முன்வைக்கப்படும் விமர்சனங்களில் உண்மையில்லை.

இலங்கை செலுத்த வேண்டிய கடனுக்கும், நாடாளுமன்ற அமர்வுக்கும் எந்த விதத்திலும் தொடர்பில்லை- என்றார். (ம-4,இ)

---

# மாவீரர்நாள் பதிவேற்றம்; கைதானவர் விடுவிப்பு!!!

திருகோணமலை, டிசெ. 15

பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு ஒரு வருடமாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த பாலகிருஸ்ணன் ரதிகரன் (வயது -28) என்ற இளைஞனுக்கு திருகோணமலை மேல் நீதிமன்றத்தால் பிணை வழங்கப்பட்டுள்ளது.

மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் வழக்கு நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டபோது ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான இரு சரீரப் பிணையில் செல்ல அனுமதி வழங்கித் தீர்ப்பளித்தார்.

மூதூர் - சம்பூர் 2ஆம் வட்டாரத்தைச் சேர்ந்தஇளைஞன் மாவீரர் தினத்தையொட்டிய கவிதையை தனது முகப்புத்தகத்தில் பதிவேற்றியமைக்காகக் கடந்த ஆண்டு மாவீரர் நாள் அன்று பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு, திருகோணமலை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்-என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-40)

---

# கொடுப்பனவு விடுவிப்பு

சாவகச்சேரி, டிசெ. 15

தென்மராட்சி பிரதேசத்தில் வீடமைப்புத்திட்டத்துக்கு தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான முதலாம் கட்டக் கொடுப்பனவுகள் பிரதேச செயலகத்தால் வழங்கப்பட்டு வருகின்றன. பயனாளிகளின் வங்கிக் கணக்குகளுக்கு அவை அனுப்பி வைக்கப்பட்டு வருகின்றன.

பத்து லட்சம் ரூபா வீடமைப்புக்குத் தெரிவு செய்யப்பட்ட 163 பேருக்கு முதலாம் கட்டக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஆறு லட்சம் ரூபா வீடமைப்புத் திட்டப்பயனாளிகள் 64 பேருக்கு முதலாம் கட்டக் கொடுப்பனவுகள் விரைவில் அவர்களின் வங்கிக் கணக்குகளுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-9)

---




**இண்டைக்கு யாழ்ப்பாணத்துக்கு சீனத் தூதுவர் வாறாரெல்லோ. வழக்கமா ஒரு நாட்டின்ர தூதுவர் ஒருபகுதிக்கு போறார் எண்டால், அதுக்கான ஏற்பாடுகள் தடல்புடலா, எல்லாரும் பார்க்கக்கூடியமாதிரி நடக்கும். ஆனால் சீனத்தூதுவரின்ர யாழ்ப்பாணப் பயணம் காதும் காதும் வைச்சமாதிரி வலு ரகசியமாத்தான் நடந்திச்சு. எப்ப வாறார், எங்கையெங்கபோறார்? ஆரையெல்லாம் சந்திக்கிறார்? எண்ட எல்லா விசயமும் "ஒருத்தருக்கும் சொல்லிப் போடாதையுங்கோ" எண்ட நிபந்தனை போட்டுத்தான் செய்தவையாம். அப்பிடி இந்தப் பயணத்தை முழுக்க ஒழுங்கு பண்ணினது வடக்கு மாகாண ஆளுநர்தான். எல்லாத்தையும் ரகசியமாச் செய்த ஆளுநர், எல்லாம் முடிவானபிறகு, சீனத்தூதுவர் வந்து போறது வரையிலான முழு நிகழ்ச்சி நிரலையும், ஒரு சொல்லுக்கூட தவறவிடாமல் கொப்பி எடுத்து, 'அந்த' இடத்துக்கும் அனுப்பி வைச்சிருக்கிறார். அதுக்குப் பிறகுதான் சீனத்தூதுவரைச் சந்திக்கப்போறவைக்கும், அவரோட கதைக்கப் போறவைக்கும், விருந்து சாப்பிடப் போறவைக்கும் அறிவிச்சிருக்கினம்.**

**இந்தப் பயணத்தில இண்டைக்கு இரவு விருந்தொண்டும் ஏற்பாடு செய்திருக்கினம். அதுக்கு யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபருக்கும் அழைப்புப் போயிருக்கு. அந்த அழைப்புக் கிடைச்ச உடனேயே அவரும் எதுக்கு சோலி எண்டிட்டு 'அந்த' இடத்துக்கு தகவலைச் சொல்லிப்போட்டு, ''டின்னருக்கு அழைப்பு வந்திருக்கு, போகலாம்தானே?'' எண்டு கேட்டிருக்கிறார். அதுக்கு 'அந்த' இடத்தில இருந்து போகலாம் எண்டு பச்சைக்கொடியும் காட்டப்பட்டிருக்கு.**

**இதேமாதிரி முனிசிப்பல் மேயர் மணிவண்ணனையும் பின்னேரம் பொதுநூலகத்தில சீனத்தூதுவர் சந்திக்கப்போறார். அப்பிடிச் சந்திக்கிற நேரம், இடம் எல்லாம் முடிவு பண்ணிட்டு, ஆளுநர் அலுவலகக்காரர் மணிவண்ணனுக்கு சொல்லியிருக்கினம். சந்திப்பு நடக்கப் போறதை உறுதிசெய்ததும், மணிவண்ணன் செய்த முதல்வேலை, 'அந்த' இடத்துக்குப் போன் பண்ணி, இப்பிடியொரு சந்திப்பில, தான் பங்குபற்றப்போறன் எண்டதைச் சொன்னது தானாம்.**

**பட்சி சொல்லுற 'அந்த' இடம் எந்த இடம் எண்டு தெரியாமல் குழம்பிறீங்களோ? அந்த இடம் வேற ஒரு இடமுமில்லை, எல்லாம் எங்கட இந்தியத் தூதரகம்தான். சீனத்தூதுவரோட கதைக்கிறதால, சாப்பிடுறதால , சந்திக்கிறதால இந்தியாவுக்கு கோபம் வந்திடக் கூடாது எண்டதில ஆளுநரில இருந்து, அரச அதிபர், மேயர் எண்டு எல்லாரும் கடும் கரிசனையாத்தான் இருக்கினம்.**

**உதைத்தான் பாலுக்கும் காவல், பூனைக்கும் தோழன் எண்டுறது கண்டியளோ.!**



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூட்டமைப்பினரின் வெற்றியை நாம் ஏற்றுக்கொள்ளமாட்டோம்

### எதிர்த்தரப்பு உறுப்பினர் ஜெகதீசன்

நானாட்டான் பிரதேச சபையின் பாதீடு வெற்றிபெற்றது - என்று நாம் ஏற்றுக் கொள்ள மாட்டோம். பல்வேறுபட்ட அச்சுறுத் தல்கள் வழங்கப்பட்டே இந்தப் பாதீடு நிறை வேற்றப்பட்டுள்ளது -என்று நானாட்டான் பிரதேச சபையின் எதிர்த்தரப்பு உறுப்பி னர் ஜீவ ஜெகதீசன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக் கையில், பாதீட்டுக்கு எதிராக வாக்களிக்க வேண்டிய சுதந்திரக் கட்சி உறுப்பினர் ஒரு வர் கூட்டமைப்பினரின் கட்டுப்பாட்டில் வைக் கப்பட்டிருந்தார். அவர் இன்று (நேற்று) கூட் டமைப்பினரின் வாக னத்தில்தான் கூட்டத் துக்கு அழைத்து வரப் பட்டார். ஏதோவொரு நிகழ்ச்சி நிரலின் அடிப் படையில்தான் இந்தப் பாதீடு நிறைவேற்றப் பட்டுள்ளது.

ஊடகவியலாளர்கள் அழைக்கப்படாமல் பொதுமக்கள் அறியா மல் இந்தக் கூட்டம் நடத்தப்பட்டுள்ளது. இந்த வெற்றியை நாம் ஏற்றுக்கொள்ள மாட் டோம் -என்றார்.

(ம-213)

நானாட்டான் பிரதேசசபை

# குழப்பங்களுக்கு மத்தியில் நிறைவேற்றப்பட்டது பாதீடு

**மன்னார், டிசெ. 15**

**மன்னார் - நானாட்டான் பிரதேசசபையின் பாதீடு கடும் கூச்சல்களுக் கும் குழப்பங்களுக்கும் மத்தியில் நேற்று நிறைவேற்றப்பட்டது.**



மன்னார் - நானாட் டான் பிரதேச சபையின் 2022ஆம் ஆண்டுக் கான வரவு- செலவுத் திட்ட கூட்டமானது நானாட்டான் பிரதேச சபையின் தவிசாளர் பரஞ்சோதியின் தலை மையில் நேற்றுக்காலை இடம்பெற்றது.

கூட்டம் ஆரம்பமாகியதி லிருந்து எதிர்த் தரப்பின ருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பி னர்களுக்கும் இடையில் கடும் வாக்குவாதம் இடம் பெற்றது.

எனினும் மேலதிகமான ஒரு வாக்கால் பாதீடு வெற்றிபெற்றது.

வரவு-செலவுத் திட்டம் வெற்றிபெற்றது தொடர் பாக நானாட்டான் பிர தேச சபையின் உபதவி சாளர் லூர்துநாயகம் புவ னம் தெரிவித்ததாவது;

நானாட்டான் பிரதேச சபையின் 2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் இன்று (நேற்று) 8:7 என்ற அடிப் படையில் நிறைவேற் றப்பட்டுள்ளது. கருத்து மோதல்கள் எங்குதான் இல்லை.

எனினும் பாதீடு நிறை வேற்றப்பட்டது - என்றார்.

(ம-19-213)

## வழித்தட அனுமதியில்லை: 25 பஸ்கள் மடக்கி பிடிப்பு

கொழும்பு,டிசெ.15

வழித்தட அனுமதிப்பத்திரமின்றி சேவையில் ஈடுபட்ட 25 பஸ்களின் சாரதிகள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நவம்பர் முதலாம் திகதிமுதல் டிசெம்பர் மாதம் 13 ஆம் திகதி வரை பொலிஸாராலும், சம்பந்தப்பட்ட சுற்றிவளைப்புப் பிரிவினராலும் குறித்த பஸ்கள் கைப்பற்றப்பட்டன -என்று தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிப்பாளரான நிலான் மிராண்ட தெரிவித்தார். இந்தப் பஸ்கள் வெள்ளவத் தையிலிருந்து யாழ்ப்பாணம், மன்னார், திருகோண மலை மற்றும் வவுனியா ஆகிய பகுதிகளுக்கு பய ணிகளை ஏற்றிச் சென்றன என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ம-4-இ)

## நீர் வழங்கல் பிரச்சினைகள்; தொலைபேசியில் அழையுங்கள்

முல்லைத்தீவு, டிசெ. 15

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பிரதேச செய லர் பிரிவில் புதுக்குடியிருப்பு கிழக்கு மற்றும் மேற்கு பிரதேசத்தில் குழாய்வழி குடிதண்ணீர் இணைப்பை பெற்றுக்கொண்ட மக்களுக்கு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையி னர் அறிவிப்பு விடுத்துள்ளனர்.

நீர் இணைப்பைப் பெற்றும் இதுவரை மாதாந்த கட்டணப் பட்டியல் கிடைக்கப்பெறாதவர்கள், நீர் மானி பொருத்தியும் நீரைப் பெற்றுக்கொள்ள முடியாதவர்கள், நீர்மானியில் பிரச்சினைகள் உள்ளவர்கள் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் அமைந்துள்ள தேசிய நீர் வழங்கல் வடிகால மைப்புச் சபையின் அலுவலகத்திலோ அல்லது கிளிநொச்சி- முல்லைத்தீவு மாவட்ட பொறியிய லாளர் அலுவலக தொலைபேசி இலக்கமான 0212283981 எனும் தொலைபேசி இலக்கத்து டனோ தொடர்புகொண்டு தங்களது பிரச்சினை களை நிவர்த்தி செய்துகொள்ளுமாறு தேசிய நீர் வழங்கல் வடிகால்மைப்புச் சபையின் கிளி நொச்சி முல்லைத்தீவு மாவட்ட பொறியியலாளர் காரியாலயம் அறிவித்துள்ளது.

(ஒ-214)

நானாட்டான் பாதீடு விவகாரம்

## கட்சித் தலைமைப்பீடம் சொன்னதை செய்தேன்

### பாதீட்டுக்கு ஆதரவு வழங்கிய சு.க. உறுப்பினர் தெரிவிப்பு

மன்னார், டிசெ. 15

என்னை எவரும் கடத்தவில்லை. என்னை எவரும் மிரட்டவில்லை. கட்சியின் தலைமை சொன்ன தையே செய்தேன் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வச முள்ள மன்னார் - நானாட்டான் பிரதேசசபையின் பாதீட்டுக்கு ஆதரவு தெரிவித்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர் பெனடிற் ஜக்கோபிள்ளை தெரி வித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; பாதீட்டுக்கு ஆதரவு கொடுக்க வேண்டும் என்று சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜெயசேகர கடந்த சில தினங்களுக்கு முன்னர் தொலை பேசி வாயிலாக எனக்கு அறிவித் திருந்தார்.

கட்சியின் உயர்பீடத்தின் அறி வுறுத்தலின் அடிப்படையில் தான் நான் செயற்பட்டேன். எவரும் என்னை அச்சுறுத்தவும் இல்லை, எவரும் என்னைக் கடத்தவும் இல்லை. எவருடைய அச்சுறுத்தலின் அடிப்படையில் நான் இந்தப் பாதீட்டை ஆதரிக் கவும் இல்லை - என்றார்.

(ம-213)

## சடலங்களை அடையாளம் காணுமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 15

உரிமை கோரப்படாது இருவ ரின் சடலங்கள் யாழ். போதனா மருத்துவமனையில் வைக்கப் பட்டுள்ளன.

விடுதி இல. 8இல் கடந்த முத லாம் திகதி சேர்க்கப்பட்டு மறு நாள் இறந்த இருவரின் சட லங்களே இதுவரை எவராலும் பொறுப்பேற்கப்படவில்லை.

எனவே இவர்களை அடையா ளம்காட்டி சடலங்களைப் பெறுப் பேற்றுக்கொள்ளுமாறு யாழ். போதனா மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர் கேட்டுள் ளார்.

(ம-4-இ)

## 55 பேருக்கு மரக்கன்றுகள்

யாழ்ப்பாணம், டிசெ. 15

சாவகச்சேரி, கல்வயல் கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த 55 குடும்பங்க ளுக்கு வீட்டுத் தோட்டத்தை ஊக்குவிக்கும் முகமாக பயன்தரும் மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

அதற்கமைவாக மாமரம், தென்னை, தேசி, மாதுளை, பலா, தேக்கு போன்ற மரக் கன்றுகள் வழங்கப்பட்டன. யாழ். மாவட்ட வனவள பாதுகாப்புத் திணைக்களத் தால் இந்தச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

(ம-4-125)

## மாற்றுத்திறனாளிகளுக்கு தொழில் வழங்குவதற்காக நிறுவனங்களுக்கு அழைப்பு

மாற்றுத்திறனாளிகளுக்கு தொழில் வழங்குவதற்கு விரும்புகின்ற நிறுவ னங்கள் தமது தொழில் வெற்றிடங் களை பதிவு செய்யுமாறு அழைக்கப் பட்டுள்ளன.

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் எதிர்வரும் 18ஆம் திகதி சனிக்கிழமை யன்று மாற்றுத் திறனாளிகளுக்கான தொழிற்சந்தை இடம்பெறும். இதில் நிறுவனங்களில் கடமையாற்றக்கூ டிய வலுவுள்ள தொழில் தேடும் மாற் றுத்திறனாளிகள் கலந்துகொள்வர். யாழ்ப்பாண மாவட்டத்தின் அனைத் துப் பிரிவுகளிலிருந்தும் கலந்து கொள்ளவிருக்கும் இவர்களுக்கான தொழில் வாய்ப்புக்களை வழங்கு வதற்கு பல நிறுவனங்கள் தொழில் நிலையத்தில் பதிவுகளை மேற் கொண்டுள்ளன.

இவர்களுடன் இணைந்து மேலும் தொழில் வாய்ப்புக்களை வழங்குவ தற்கு ஆர்வமுள்ள நிறுவனங்கள் எதிர்வரும் 16ஆம் திகதிக்கு முன் னதாக மாவட்ட தொழில் நிலை யத்தில் நேரடியாகவோ அல்லது 021-2219359 இலக்க அலுவலக தொலைபேசியூடாகவோ பதிவுகளை மேற்கொள்ள முடியும் என்று மாவட் டச் செயலர் அறிவுறுத்தியுள்ளார்.

(ம-4-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தலைமன்னார் மேற்கில்

# காணி அளவீட்டு நடவடிக்கை மக்களின் எதிர்ப்பால் நிறுத்தம்

**மன்னார், டிசெ. 15**

**மன்னார் பிரதேச செயலர் பிரிவிலுள்ள தலைமன்னார் மேற்குப் பகுதியில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை காலை வனவளத் திணைக்களத்தினர் காணி அளவீட்டுக்காகச் சென்ற நிலையில், அந்தப் பகுதி மக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்ததைத் தொடர்ந்து அளவீடுகள் கைவிடப்பட்டன.**

காணிகளை அளவீடு செய்வதற்காக வனவளத் திணைக்களத்தினர் வருகின்றனர் என்ற தகவலை அறிந்த மக்கள், வனவளத் திணைக்களத்தினரின் குறித்த அளவீட்டு நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். தமது பூர்வீக நிலங்கள் அபகரிக்கப்படுவதே இந்த அளவீட்டுக்கான முக்கிய காரணம் என்று அவர்கள் குற்றஞ்சாட்டினர். இதைத் தொடர்ந்து, வனவளத் திணைக்களத்தினருக்கும் தலைமன்னார் பங்குத்தந்தை மாக்கஸ் அடிகளாருக்கும் பொதுமக்களின் பிரதிநிதிகளுக்கும் இடையில் பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டன. இதைத் தொடர்ந்து வனவளத் திணைக்களத்தினர் அளவீட்டுப் பணிகளைக் கைவிட்டுத் திரும்பினார்கள். (ம-56)

## பெண்கள் மீது வன்முறை கருத்துச் செயலமர்வு

யாழ்ப்பாணம்,டிசெ.15

யாழ். மாவட்டத்தில் பெண்களுக்கெதிரான வன்முறைகள் தொடர்பான பிரச்சினைகளின் தற்போதைய நிலைமையைப் புரிந்துகொள்வதற்கும், முக்கிய சவால்களைக் கண்டறிந்து அவற்றைத் திறம்பட எதிர்கொள்வதற்குமான வழிமுறைகளை ஆராய்தல் தொடர்பான கருத்துச் செயலமர்வு இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு யு.எஸ். ஹொட்டல் இல.85, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணத்தில் இடம்பெறும்.

இதில் அனைத்து துறைசார் அரச, அரசசார்பற்ற தனியார், சிவில் சமூக பிரதிநிதிகள் பங்கேற்பர்.

பால்நிலை வன்முறைக்கெதிரான 16 நாள் செயற்றிட்டத்தில் "பெண்களுக்கெதிரான வன்முறையை இப்போதே நிறுத்துவோம்!" என்ற தலைப்பில் செயலமர்வு நடத்தப்படும்.

யாழ்.சமூக செயற்பாட்டு மையம், யாழ் மாவட்டச் செயலகத்துடன் இணைந்து யு.என்.எச்.சி.ஆர். நிறுவனத்தின் நிதி அனுசரணையுடன் "மீள்பார்வை செய்வோம்! சவால்களை இனங்காண்போம்! தடை தாண்ட வழி காண்போம்!" என்ற கருப்பொருளுடன் செயலமர்வு நடைபெறும். (ஒ-4)

## முகாமைத்துவ போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், டிசெ. 15

தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கிராம அலுவலர் அலுவலகங்களுக்கிடையில் நடத்தப்பட்ட முகாமைத்துவப் போட்டிகளின் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

போட்டிகளில், இளவாலை வடக்குப் பிரிவு முதலிடத்தையும் மயிலிட்டித்துறை வடக்குப் பிரிவு இரண்டாமிடத்தையும் மல்லாகம் தெற்குப் பிரிவு மூன்றாமிடத்தையும் தையிட்டி தெற்கு, தெல்லிப்பழை கிழக்கு ஆகிய பிரிவுகள் முறையே நான்காம், ஐந்தாம் இடங்களையும் பெற்றுக் கொண்டன. இந்த அலுவலகங்களுக்குப் பொறுப்பான கிராம அலுவலர்களுக்கு பிரதேச செயலகத்தால் விருதுகள் வழங்கப்படவுள்ளன. (ஒ-ரி1,9)

## சாவகச்சேரியில் 4பேர் டெங்கால் பாதிப்பு

சாவகச்சேரி, டிசெ.15

தென்மராட்சியில், கடந்த வாரம் நான்கு பேர் டெங்கால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாக சாவகச்சேரி சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். சாவகச்சேரி பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் இருவரும் வரணி மற்றும் கைதடி ஆகிய பிரிவுகளில் தலா ஒருவரும் டெங்கால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

டெங்கு பாதிப்பு அதிகமாகப் பரவுவதால், இரு தினங்களுக்கு மேல் காய்ச்சல் காணப்பட்டால் அருகில் உள்ள மருத்துவமனையில் பரிசோதனை மேற்கொள்ளுமாறும் டெங்கு உயிர்கொல்லிநோய் என்பதால் மக்களை அவதானமாக இருக்குமாறும் சாவகச்சேரி சுகாதாரப் பிரிவினர் அறிவித்துள்ளனர். (ஒ-ரி1,9)



## முல்லைத்தீவு மாவட்டத்துக்கு புதிய சமுர்த்திப் பணிப்பாளர்



முல்லைத்தீவு,டிசெ.15

முல்லைத்தீவு மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளராக கூட்டுறவு சேவைகள் சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளராக கடமையாற்றிய, எம்.முபாரக் கடமையேற்றுள்ளார்.

இலங்கை நிர்வாக சேவையின் முதற்தரத்தைச் சேர்ந்த இவர், பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாமணி பட்டத்தையும், பொதுநிர்வாகத் துறையில் முதுகலைமாணி பட்டத்தையும் பெற்றுள்ளார். இவர் பிரதேச செயலர், திணைக்களங்களின் பணிப்பாளர், இறுதியாக இராஜாங்க அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளராகக் கடமையாற்றியுள்ளார். இவர் கடந்த 6 ஆம் திகதி முதல் முல்லைத்தீவு மாவட்ட சமுர்த்தி பணிப்பாளராகக் கடமையேற்றுள்ளார். (ஒ-419)



## போதைப் பொருள்களுடன் சந்தேகநபர் கைது

யாழ்ப்பாணம், டிசெ.15

கஞ்சா மற்றும் ஹெரோய்ன் போதைப்பொருள்களுடன் சந்தேகநபர் ஒருவர் கல்லுண்டாய் பகுதியில் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார். இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார். சந்தேகநபரிடம் இருந்து ஒரு கிலோ கஞ்சா, 10 மில்லி கிராம் ஹெரோய்ன் என்பன கைப்பற்றப்பட்டன என்று மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.(ஒ-4,27)

## தொற்றால் மூடப்பட்டது வர்த்தக நிலையம்

சாவகச்சேரி, டிசெ.15

சாவகச்சேரியில் வர்த்தக நிலைய உரிமையாளருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து, வர்த்தக நிலையம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மூடப்பட்டது.

வர்த்தக நிலைய உரிமையாளருக்கு தொற்று அறிகுறி காணப்பட்டதையடுத்து தனியார் மருத்துவமனையில் பரிசோதனை மேற்கொண்டபோது தொற்று ஏற்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

பிரிவு பொதுச் சுகாதார பரிசோதகருக்குக் கிடைத்த தகவலையடுத்து வர்த்தகர் தனிமைப்படுத்தப்பட்டதுடன் வர்த்தக நிலையமும் மூடப்பட்டது. இந்த வர்த்தக நிலைய உரிமையாளரின் குடும்பத்தைச் சேர்ந்த கர்ப்பிணி உட்பட நால்வருக்கு, கடந்த வாரம் தனியார் மருத்துவமனையில் மேற்கொண்ட பரிசோதனையில் [illegible] தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ.ரி1,9)

## தடுப்பூசி ஏற்றல்

மன்னார், டிசெ.15

நானாட்டான் பிரதேசத்தில் இரண்டாவது தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டு 3 மாதங்களைப் பூர்த்தி செய்தவர்களுக்கு மூன்றாவது தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

இன்று புதன்கிழமை நானாட்டான் டிலாசாலே கல்லூரியிலும், நாளை வியாழக்கிழமை வங்காலை புனித ஆனாள் ஆலய வளாகத்திலும், 17ஆம் திகதி வெள்ளிக்கிழமை மடுக்கரை பிணியாய்வு நிலையத்திலும் காலை 8 மணி முதல் நண்பகல் 12மணிவரை தடுப்பூசி ஏற்றப்படும்.

மேலும், சினோபார்ம் முதலாம், இரண்டாம் தடுப்பூசியும், பைஸர் இரண்டாவது தடுப்பூசியும், 20 வயதுக்குட்பட்ட பாடசாலை மாணவர்கள் மற்றும் பாடசாலை இடைவிலகியவர்களுக்குமான பைஸர் தடுப்பூசியும் ஏற்றப்படும்.

தடுப்பூசி அட்டை மற்றும் தேசிய அடையாள அட்டையுடன் வருகைதந்து தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளுமாறு நானாட்டான் பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி வேண்டுகோள் விடுத்துள்ளார். (ஒ-ரி1,213)



## கள் விலை குறைப்பு

சாவகச்சேரி,டிசெ.15

சாவகச்சேரிப் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினர் கள்ளின் விற்பனை விலையைப் பத்து ரூபாவால் குறைத்துள்ளனர்.

கடந்த மாதம் 21 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் பனம் கள் 110 ரூபாவுக்கும், தென்னம் கள் 120 ரூபாவுக்கும், போத்தல் கள் 100 ரூபா வுக்கும் விற்பனை செய்யப்படுகின்றது. (ஒ-4,9)

## கருத்தமர்வு

சாவகச்சேரி, டிசெ.15

தென்மராட்சிப் பிரதேச அறநெறிப் பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கான 'கற்பித்தல்' தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தமர்வு இடம் பெறவுள்ளது.

கருத்தமர்வு, எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறும் என்று பிரதேச [illegible] அலகினர் இந்துசமய [illegible] தெரிவித்துள்ளனர். (ஒ-ரி1,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கராஜ வனத்தில் மாயமான பெண்கள்


கொழும்பு, டிசெ. 15
சிங்கராஜ வனப்பகுதிக்குள் நுழைந்த 39 மற்றும் 40 வயதுடைய இரு பெண்கள் காணாமற் போயுள்ளனர். சம்பவம் தொடர்பில் சூரியகந்த பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. காணாமற் போன பெண்கள் இருவரும் இட்டகந்த பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் வனத்தில் ஏலக்காய் விதைகளை சேகரிப்பதற்காகச் சென்றனர் -என்று தெரிவிக்கப்படுகின்றது. இருவரையும் தேடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சூரியகந்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-4-இ)

# 4ஆவது டோஸுக்கும் வாய்ப்புக்கள் உள்ளன

## சுகாதாரத்துறையினர் தகவல்

**கொழும்பு, டிசெ. 15**
**எதிர்காலத்தில் கொரோனாத் தடுப்பூசியின் நான்காவது டோஸும் செலுத்தப்பட வாய்ப்புக்கள் உள்ளன -என்று சுகாதார சேவைகளின் பிரதிப் பணிப்பாளர் நாயகமான மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்: எதிர்காலத்தில் கொரோனாத் தடுப்பூசியின் நான்காவது டோஸும் செலுத்தப்பட வாய்ப்புக்கள் உள்ளன. தற்போது வழங்கப்பட்டுள்ள தடுப்பூசி அட்டை எடுத்துச்செல்வதற்கு ஏற்றதல்ல.
ஒரு தரவுத்தளத்தில் தகவல் சேர்க்கப்படும்வரை மற்றும் குறியீடு அமைப்பு அறிமுகப்படுத்தப்படும் வரை தடுப்பூசி அட்டையை எச்சரிக்கையுடன் பயன்படுத்தவேண்டும். எதிர்காலத்தில் கையடக்கத் தொலைபேசி ஊடாக இந்த முறைமையைப் பெற்றுக்கொள்ள முடியும். நான்காவது டோஸுக்கும் வாய்ப்புள்ளது என்பதால் தடுப்பூசி அட்டையை லெமினேட் செய்வதைத் தவிர்க்க வேண்டும் -என்றார். (ம-4)



# இந்தோவில் நிலநடுக்கம்: இலங்கைக்கு பாதிப்பில்லை

கொழும்பு, டிசெ. 15
கிழக்கு இந்தோனேஷியாவில் நேற்று அதிகாலை 7.6 ரிச்டர் அளவில் ஏற்பட்ட நில நடுக்கம் பதிவாகியுள்ளது. இதனால் இலங்கைக்கு பாதிப்பு ஏற்பட வாய்ப்பில்லை என்று புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது. நிலைமையை உன்னிப்பாக அவதானித்து வருகின்றோம் -என்று பணியகத்தின் தலைவரான அநுர வல்பொல தெரிவித்துள்ளார்.
இந்தோனேஷியாவின் புளோரஸ் தீவில் 76 கிலோ மீற்றர் ஆழத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டது -என்று அமெரிக்க புவியியல் ஆய்வுமையம் தெரிவித்துள்ளது. அத்துடன் இந்தோனேஷியாவுக்கு சுனாமி எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது. (ம-4-இ)

# மதுபானத்துக்கு அனுமதியில்லை

கொழும்பு, டிசெ. 15
கிறிஸ்மஸ் தினத்தை இலக்காகக் கொண்டு, சாதாரண ஹொட்டல்கள் அல்லது உணவகங்களுக்கு மதுபானங்களை வழங்குவதற்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்படவில்லை என்று மதுவரித் திணைக்கள ஆணையாளர் கபில குமாரசிங்க தெரிவித்துள்ளார்.
சுற்றுலா சபையால் அங்கீகரிக்கப்பட்ட ஹொட்டல் அறைகளில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு மாத்திரமே கிறிஸ்மஸ் தினத்தன்று மதுபானங்களை வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
இது இந்தவருடம் மட்டுமன்றி இதற்கு முன்னரும் வழங்கப்பட்டிருந்தது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4-இ)

# பாவனைக்கு உதவாத சீனி மூடைகள் மீட்பு!

கொழும்பு, டிசெ. 15
தம்புள்ள பொருளாதார மத்திய நிலையத்தை அண்டிய தனியார் களஞ்சியசாலையில், மனித பாவனைக்கு உதவாத் சீனி மூடைகள் மீட்கப்பட்டன.
இந்தியாவில்இருந்து இறக்குமதி செய்யப்பட்ட சீனி மூடைகளை, டுபாயில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டவை என்று பெயரிடப்பட்ட பொதிகளில் மாற்ற முயற்சித்த போது, தம்புள்ள மாநகரசபையின் சுகாதாரப் பகுதி அதிகாரிகள் சுற்றிவளைப்பை மேற்கொண்டனர்.
தரமற்ற சீனி தொடர்பில் கடை உரிமையாளருக்கு எதிராக தம்புள்ள பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.
இந்த மோசடி பல நாள்களாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ம-4-இ)

# மது விற்பனையை தடை செய்யுங்கள்

## பேராயர் கோரிக்கை

கொழும்பு, டிசெ. 15
வெசாக் பண்டிகையின்போது மதுபானம் விற்பனை செய்வதற்குத் தடை விதிக்கப்படுவதைப் போன்று, கிறிஸ்மஸ் காலத்திலும் மதுபான விற்பனை தடை செய்யப்பட வேண்டும் -என்று கொழும்பு மறை மாவட்ட பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்; சுற்றுலா அமைச்சகத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஹொட்டல்களில் கிறிஸ்மஸ் தினத்தன்று மதுபானங் களை விற்பனை செய்ய அனுமதிக்க வேண்டும் -என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
மதம் என்பது குடித்துவிட்டு வாழ்க்கையை வீணாக்குவது அல்ல. கிறிஸ்மஸ் நாளில் மதுபானம் வாழ்க்கையை [illegible] அனுமதிப்பது செழுமையின் பார்வையா - என்றார். (ம-4-இ)

# சிறுவர்களுக்கு ஒரு டோஸ் பைஸர்

கொழும்பு, டிசெ. 15
இலங்கையில் 12 வயதுக்கும் 15 வயதுக்கும் இடைப்பட்ட சிறுவர்களுக்கு பைஸர் தடுப்பூசியின் ஒரு டோஸை மட்டும் செலுத்துவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.
தடுப்பூசி நிபுணத்துவக் குழுவால் இந்தப் பரிந்துரை வழங்கப்பட்டுள்ளது என்று இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார். இதே வேளை, கொரோனாத் தடுப்பூசியின் இரண்டாவது டோஸைப் பெற்றுக்கொண்ட 20 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4-இ)

# சுகாதாரத் துறைக்கு தடங்கல் சுகாதார அமைச்சரே பொறுப்பு

கொழும்பு, டிசெ. 15
எதிர்காலத்தில் சுகாதாரத் துறைக்கு தடங்கல்கள் ஏற்படுமாயின் அதற்கு சுகாதார அமைச்சரே பொறுப்பேற்க வேண்டும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.
இதுதொடர்பில் சங்கத்தின் உதவிச் செயலாளரான மருத்துவர் நவீன் டி சொய்சா தெரிவிக்கையில்;
அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் சில நடவடிக்கைகள் சுகாதாரத் துறையைப் பாதிக்குமாயின், ஏதேனும் தடங்கல் ஏற்பட்டால் அதற்கு அரசு மீதே குற்றஞ் சுமத்த வேண்டும். முன்னைய அரசின் ஆட்சிக் காலத்தில் சுகாதாரத்துறையில் ஏற்பட்ட முரண்பாடுகளை தற்போதைய சுகாதார அமைச்சர் சரி செய்யத் தவறியமையே இதற்குக் காரணம் -என்றார். (ம-4-இ)

# வாகனங்களின் விலை மேலும் அதிகரிக்கலாம்




வாகன இறக்குமதிக்கு புதிய விசேட பொருள்கள் சேவைகள் வரி விதிக்கப்பட்டால், இறக்குமதி செய்யப்படும் வாகனங்களின் விலை மேலும் உயரும் என்று இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் செயலாளரான [illegible] ரொட்ரிகோ தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்;
நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனாத் தொற்றால் அந்நியச் செலாவணியைச் சேமிப்பதற்காக அரசால் மொத்த வாகன இறக்குமதிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. தற்போதைய வரவு-செலவுத் திட்ட முன்மொழிவு வாகன இறக்குமதி இடைநிறுத்தத்தை அடுத்தாண்டு வரையிலும் வைத்திருக்கும். வாகனங்கள் மிகவும் விலையுயர்ந்தவை. மக்கள் பல சிரமங்களுக்கு மத்தியிலும் புதிய வாகனங்களைக் கொள்வனவு செய்யப் பழகி வருகின்றனர். எனவே, இறக்குமதியாளர்கள் எதிர்நோக்கும் இந்த நெருக்கடியான சூழ்நிலையில் வாகன இறக்குமதிக்கு இவ்வாறான வரிகளை விதிக்கவேண்டாம். -என்றார். (ம-4-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## தீர்வல்ல, முதலாவது காலடி மட்டுமே..!

மனிதனொருவன் நெடுந்தூரம் பயணித்து, கடலின் மறுகரைக்கு போகவேண்டியிருந்தது. ஒரு கட்டுமரக்காரன் அவனை ஏற்றிச் செல்வதாகக்கூறினான். ஆனால், அது மிகப்பழைய கட்டுமரம். கடலின் பாதிதூரத்தைக் கூட அது தாண்டுமா என்பது சந்தேகமே. அதனால் கட்டுமரத்தில் ஏற அந்த மனிதன் மறுத்துவிட்டான். பின்னர் ஓர் இயந்திரப்படகுக்காரன் அவனை அணுகினான். அதிலும், ஏறமுடியாது என்று இவன் மறுத்துவிட்டான். அதன்பின்னர் ஒரு கப்பல் வரவே, அதில் மகிழ்ச்சியோடு ஏறினான். ஆனால், எதிர்பாராதவிதமாக சில நிமிடங்களில் அந்தக் கப்பல் பாறையொன்றுடன் மோதி சுக்குநூறானது. அந்த மனிதனும் கடலுக்குள் வீழ்ந்து, தத்தளிக்கத் தொடங்கினான். அந்தச் சமயத்தில் அவன் முதலில் ஏற மறுதலித்த கட்டுமரம் அவனருகே வந்தது. 'முதலில் ஏறமுடியாது என்று ஒதுக்கிய கட்டு மரத்தில் இப்போது ஏறினால் என் கௌரவம் என்னாவது?'என அவன் யோசிக்கவில்லை. ஏனெனில் இப்போது அவனது உயிரைக் காப்பாற்ற இது ஒன்றுதான் அவசரவழி. இதையும் விட்டால் மூழ்கவேண்டியதுதான். அதற்காக கட்டுமரம் மட்டும்தான் அவனது இறுதி வழியுமல்ல. கட்டுமரத்தில் ஏறி இப்போது உயிர் பிழைத்தால், பின்னர் கடலில் வரும் ஏதேனுமொரு கப்பலில் கரையை அடைவதே அவனது இப்போதையை திட்டம்.

அந்த மனிதனைப் போலவேதான் தமிழினமும் இருக்கின்றது. நாம் கட்டுமரமாக எண்ணி மறுதலித்தது '13' ஆவது திருத்தச் சட்டத்தையே. ஆனால், கப்பலாக நாம் நம்பி நின்ற ஆயுதப்போரர்ட்டம் திடீரென மௌனிக்கப்பட்டதால், இப்போது நடுக்கடலில் வீழ்ந்ததுபோல, கொழுகொம்பின்றித் தத்தளித்துக் கொண்டிருக்கிறோம். எனவே இப்போதைக்கு நமக்கிருக்கும் ஒரே பிடிமானம் '13' ஆம் திருத்தம் மட்டுமே. ஒருவேளை, நமது வறட்டுக் கௌரவத்தைப் பார்த்து ' முன்னர் நாம் நிராகரித்த '13' ஆவது திருத்தத்தை எப்படி ஏற்கலாம்?'என விதண்டாவாதம் கதைத்துக் கொண்டிருப்போமானால், அதனால் ஏதும் உருப்படியாக நிகழப்போவதுமில்லை. முன்னர் நாம் '13' ஆவது திருத்தச் சட்டத்தை நிராகரித்தபோது, விடுதலைப் போராட்டம் என்ற பேரம் பேசும் சக்தி இருந்தது. புலிகள் இருக்கிறார்கள் என்ற ஆன்மபலம் இருந்தது. ஆனால் இன்று அவையில்லாத நிலையில், எவ்வித பேரம்பேசும் சக்தியும் இல்லாமல், அரசியல் அநாதைகளாக ஒட்டுமொத்த தமிழினமும் நடுத்தெருவில் நிற்கின்றது. இத்தகைய சூழமைவில், 'கிடைத்தால் சமஷ்டி மட்டுமே' என்ற ஒற்றைக் கோஷத்தோடு நிற்போமானால், இப்போது இருக்கும் சில உரிமைகளும் இல்லாமற்போய்விடலாம். எல்லோர் வீடுகளுக்குள்ளும் புத்தர் சிலைகள் நிறுவப்படலாம். தமிழர் தாயகம் முழுவதையும் சிங்களக் குடியேற்றங்கள் விழுங்கலாம். தனிச் சிங்களச் சட்டம்கூட மீண்டும் கொண்டுவரப்படலாம். இப்படி எமது தேசத்துக்குள்ளேயே நாம் அந்நியப் பிரஜைகளாக்கப்பட்டு, அடித்துத் துரத்தப்படவும் கூடும்.

தொடர்ச்சியாக இழப்புக்களையும், தோல்விகளையும், சிங்களப் பேரினவாதத்தின் பல்வகையான ஆக்கிரமிப்புக்களையும் சந்தித்துவரும் தமிழினத்துக்கு ஒரு தற்காலிக துயர்தடுப்பு நிலையை உருவாக்க கைவசமுள்ள ஒரேயொரு பிடிமானம் '13' ஆம் திருத்தச் சட்டம் மட்டுமே. ஆனால் '13' ஆம் திருத்தம்தான் முடிந்தமுடிவான தீர்வுமல்ல. தீர்வுக்கான ஓர் ஆரம்பமாக மட்டுமே '13' ஐ கருதமுடியும். எனவே இந்த ஆரம்பத்தை சரியானவகையில் நமதாக்கி, நிரந்தர அரசியல் தீர்வுக்கான பாய்ச்சலுக்காகத் தயாராவதுதான் இப்போது தமிழினம் எடுக்கக்கூடிய புத்திசாலித்தனமான முடிவு. அதைவிடுத்து, 'அப்போது எதிர்த்த '13' ஐ இப்போது எப்படி ஆதரிக்கலாம்?' - என்று யதார்த்தம் புரியாமல், கத்துவதால் கிடைப்பதைவிடவும் இழப்பதே அதிகமாயிருக்கும்.
எந்தவொரு பெரும்பயணமும் முதலாவது காலடியில் இருந்தே தொடங்குகின்றது. '13' ஆம் திருத்தம் எமக்கான அரசியல் தீர்வின் முதல் காலடி. அந்த முதல் காலடியை எடுத்துவைக்கத் தயங்குவோமாயின் அப்படியே பயணப்படாது தேங்கி நிற்கவேண்டியதுதான்...!



# தபால்சேவை ஊழியர்கள் தொழிற்சங்கப் போராட்டம்

**யாழ்ப்பாணம், டிசெ.15**
**16 கோரிக்கைகளை முன்வைத்து, தபால் சேவை ஊழியர்கள் நாடளாவிய ரீதியில் நேற்று தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுத்தனர்.**



அகில இலங்கை தபால் சேவை மற்றும் தொலைத் தொடர்பு ஊழியர்கள் ஒன்றிணைந்து இந்தத் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டனர்.
இதற்கமைய புதிய சேவைச் சட்டவரைவொன்றை ஸ்தாபித்தல், சனிக்கிழமை கொடுப்பனவில் 20 வீதத்தை வழங்குதல், வெற்றிடங்களை நிரப்புதல் போன்ற 16 கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.
வவுனியாவிலும் தபால் ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். சிறுநீரக கொடுப்பனவு மற்றும் முதியோர் கொடுப்பனவு போன்ற பல்வேறுதேவைகளின்பொருட்டு தபால் நிலையங்களுக்குச் சென்ற பொதுமக்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றிருந்தனர். (ம-4-110)

# மக்கள் மனநிலையை அறிய விரைந்து தேர்தல் நடத்துக

*ஐக்கிய மக்கள் சக்தி சவால்*

கொழும்பு,டிசெ.15
மக்களின் மனநிலை என்னவென்பதை அறிவதற்காக உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான அறிவிப்பை விடுக்கவும் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி சவால் விடுத்துள்ளது.
இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினரான எஸ்.எம். மரிக்கார் தெரிவிக்கையில்,
விவசாயத்தை அழித்து, விவசாயிகளை நெருக்கடிக்குள் தள்ளியுள்ள இந்த அரசு, மக்களை பட்டினியில் வாட வைத்துள்ளது.
மறுபுறத்தில் எரிவாயு வரிசை, அரிசி வரிசை, சீனி வரிசை உருவாகியுள்ளது. எதிர்காலத்தில் பருப்பு மற்றும் மருந்துப் பொருள்களுக்கும் வரிசைகள் உருவாகலாம். எனவே, மக்களின்மனநிலை என்னவென்பதை அரசு அறியவேண்டும். அதற்காக தேர்தலை நடத்துமாறு சவால் விடுக்கின்றோம்.
கோப் மற்றும் கோபா குழுக்களின் தலைவர்கள் ஆளுங்கட்சி உறுப்பினர்களாக இருந்தாலும் அவர்கள் நடுநிலையாக செயற்பட்டனர். முதலீட்டுச்சபை, சுற்றுலா அதிகாரசபை உள்ளிட்ட நிறுவனங்களை அழைத்து கோப் குழுவின் தலைவர் விசாரணை நடத்தினார். எனவே, அவர்களை மாற்ற வேண்டிய தேவை அரசுக்கு உள்ளது. அதனால் தான் நாடாளுமன்ற அமர்வு இடைநிறுத்தப்பட்டுள்ளது- என்றார். (ம-4-44)

# பேக்கரி உற்பத்திப் பொருள்களின் விலையை அதிகரித்து விற்கவேண்டாம்

*பேக்கரி உரிமையாளர் சங்கம் கோரிக்கை*

யாழ்ப்பாணம், டிசெ. 15
யாழ்ப்பாண மாவட்டத்தில் நடமாடும் பேக்கரி உற்பத்தி விற்பனையாளர்கள் ஊடாக அதிகரித்த விலையில் பொருள்கள் விற்கப்படுவதாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இது தொடர்பில் பேக்கரி உரிமையாளர்கள் கவனம் செலுத்தவேண்டும். இத்தகைய செயற்பாடுகள் தொடருமானால், நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையினர் நடவடிக்கை எடுப்பார்கள் என்று யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் செயலர் கா.பாஸ்கரன் தெரிவித்துள்ளார். (ஒ-5)

**நாளை**
**16.11.2021**
**வியாழக்கிழமை**
**மார்கழி 01**
சுபநேரம் : காலை 07.52 - மு.ப 09.22
ராகுகாலம்: பி.ப. 01.52 -பி.ப. 03.22
பிரதோஷ விரதம்
கார்த்திகை விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் ப.புஸ்பரட்ணம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

# தமிழ் இராச்சியத்தின் தோற்றம் பற்றிய அரிய கல்வெட்டு திருகோணமலையில்

புகைபடர்ந்திருக்கும் இலங்கைத் தமிழரின் ஆதிகால, இடைக்கால வரலாற்றுக்குப் புதுவெளிச்சமூட்டி வருவதில் தொல்லியற் கண்டுபிடிப்புக்களுக்கு முக்கிய இடமுண்டு. அந்தக் கண்டுபிடிப்புக்களில் கல்வெட்டுக்கள் நம்பகரமான முக்கிய சான்றுகளாகப் பார்க்கப்படுகின்றன. அவை இலக்கியங்களைப் போல், விரிவான வரலாற்றுச் செய்திகளைத் தராவிட்டாலும் அவை வரலாற்றுச் சம்பவங்கள் நடந்த சமகாலத்திலேயே பெரும்பாலும் எழுதப்பட்டிருப்பதனால் அவற்றில் இருந்து அறியப்படும் வரலாற்றுச் செய்திகள் நம்பகரமானதாகவே பார்க்கப்படுகின்றன. இவை ஒரு நாட்டில் வாழும் பல இன மக்கள் பற்றிய பாரம்பரிய வரலாற்று நம்பிக்கைகளை மீளாய்வு செய்வதிலும் முக்கியபங்கு வகிக்கின்றன. இதற்கு திருகோணமலை மாவட்டத்தில் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள கல்வெட்டையும் உதாரணமாகக் குறிப்பிடலாம்.



கி.பி. 13ஆம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சேர்ந்த இந்தக் கல்வெட்டுப்பற்றிய தமிழக அறிஞர்களின் வாசிப்பிலிருந்து இலங்கைத் தமிழர் வரலாறுபற்றி இதுவரை அறியப்படாதிருந்த புதிய பல வரலாற்று உண்மைகள் தெரியவந்துள்ளன. அவை சோழர் ஆட்சியிலிருந்து – ஐரோப்பியர் காலம்வரை தமிழர் பிராந்தியங்களின் ஆட்சியுரிமை, நிர்வாக – ஒழுங்கு என்பன தனிப்போக்குடன் வளர்ந்தமையைக் கோடிட்டுக் காட்டுவதாக உள்ளன.

## அமைவிடம்

இந்தக் கல்வெட்டு திருகோணமலைநகரில் இருந்து ஏறத்தாழ 50 கி.மீ தொலைவில் திருகோணமலை மாவட்டத்தில் தனி நிர்வாகப் பிரிவாக உள்ள கோமரன்கடவல பிரதேசத்தில் உள்ள முக்கிய வீதியுடன் இணைந்திருக்கும் காட்டுப் பகுதியில் காணப்படுகின்றது. முன்னர் இப்பிரதேசம் கட்டுக்குளப்பற்று நிர்வாகப் பிரிவாக இருந்தபோது இந்த இடம் 'குமரன்கடவை' எனவும் அழைக்கப்பட்டு வந்ததாகக் கூறப்படுகின்றது. இங்குள்ள காட்டுப்பகுதியில் கல்வெட்டுடன் அதன் சமகாலத்துக்குரிய அழிவடைந்த சிவாலயமும், அதன் சுற்றாடலில் அழிவடைந்த கட்டட அத்திபாரங்களும் காணப்படுகின்றன. அவற்றுள், அழிவடைந்த சிவாலயம் அதே நிலையில் தொல்லியற் திணைக்களத்தால் பாதுகாக்கப்பட்டிருக்கின்றது. இவ்வாலயத்துக்கு மிக அருகிலுள்ள சிறு மலையிலேயே கல்வெட்டும் காணப்படுகின்றது. மலையின் மேற்பகுதியில் திருவாசிபோன்ற வட்டமும், அதனுடன் இணைந்த ஆவுடையாருடன் கூடிய சிவலிங்கமும் செதுக்கப்பட்டுள்ளன. சிவ லிங்கத்துக்கு மேலிருக்கும் வட்டம் சக்தி வழிபாட்டு மரபுக்குரிய சக்கரமாக இருக்கலாம் எனப் பேராசிரியர் பொ.இரகுபதி குறிப்பிடுகின்றார். இந்தக் குறியீடுகளுக்குக் கீழே 22 வரிகளில் தமிழ்க் கல்வெட்டுப் பொறிக்கப்பட்டுள்ளது.

முதல் இரு வரிகளும், ஏனையவற்றில் சில சொற்களும் சமஸ்கிருத கிரந்தத்தில் இருக்கின்றன. கல்வெட்டின் வலப்பக்கத்திலுள்ள பல எழுத்துப் பொறிப்புக்கள் மலையின் மேற்பகுதியில் இருந்து கீழ் நோக்கி வழிந்தோடும் நீரினால் சிதைவடைந்தும் தெளிவற்றும் காணப்படுகின்றன. இடப்பக்க எழுத்துப் பொறிப்புக்கள் தெளிவாகக் காணப்பட்டதால் கல்வெட்டைப் படியெடுத்தவர்கள் ஆர்வமிகுதியால் பல சொற்களைப்



படித்தனர். ஆயினும் கல்வெட்டின் ஒரு பாகம் தெளிவற்றுக் காணப்பட்டதால் அதுகூறும் வரலாற்றின் முழுமையான உள்ளடக்கத்தைப் புரிந்துகொள்ள முடியவில்லை. இதனால் தென்னாசியாவின் முதன்மைக் கல்வெட்டு அறிஞரும், பேராசிரியருமான வை.சுப்பராயலு, தமிழக தொல்லியற்றுறையின் முன்னாள் மூத்த கல்வெட்டறிஞரான கலாநிதி சு.இராஜகோபால் ஆகியோரின் உதவி பெறப்பட்டு கல்வெட்டிலுள்ள வாசகங்கள் ஓரளவு அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

கி.பி. 13ஆம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சேர்ந்த இந்தக் கல்வெட்டுப் பற்றிய தமிழக அறிஞர்களின் வாசிப்பிலிருந்து இலங்கைத் தமிழர் வரலாறு பற்றி இதுவரை அறியப்படாதிருந்த புதிய பல வரலாற்று உண்மைகள் தெரியவந்துள்ளன. அவை சோழர் ஆட்சியிலிருந்து ஐரோப்பியர் காலம்வரை தமிழர் பிராந்தியங்களின் ஆட்சியுரிமை, நிர்வாக ஒழுங்கு என்பன தனிப் போக்குடன் வளர்ந்தமையைக் கோடிட்டுக் காட்டுவதாக உள்ளன. மேலும் யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றகாலப் பின்னணி, அதுதோன்றிய காலம், தோற்றுவித்த வம்சங்கள் தொடர்பான முன்னைய வரலாற்றுப் பார்வையை மீளாய்வு செய்வதிலும் தெளிவுபடுத்துவதிலும் இந்தக் கல்வெட்டு அதிக முக்கியத்துவம் பெறுகின்றது.

கல்வெட்டுப் படியெடுத்த காலப்பகுதியிலேயே கல்வெட்டின் ஒளிப்படங்களைப் பேராசிரியர் கா.இந்திரபாலா, பேராசிரியர் சி.பத்மநாதன், பேராசிரியர் பொ.இரகுபதி ஆகியோருக்கு அனுப்பி அவர்களின் கருத்துக்கள் பெறப்பட்டுள்ளன. தமிழக அறிஞர்களால் பெருமளவு வாசித்து முடிக்கப்பட்ட கல்வெட்டு வாசகத்துக்கு மேற்கூறிய அனைவருமே வழங்கிய கருத்துக்கள், விளக்கங்கள் என்பன இலங்கைத் தமிழர் வரலாற்றுக்குப் புதிய செய்திகளைச் சொல்வதாக உள்ளன.

## பேராசிரியர்களின் விளக்கங்கள்

தென்னிந்தியாவில் நீண்டகால வரலாற்றை கொண்டிருந்த சோழ அரசு தஞ்சாவூரைத் தலைநகராகக் கொண்டு பத்தாம் நூற்றாண்டிலிருந்து ஒரு பேரரசாக எழுச்சியடைந்தபோது அவ்வரசின் செல்வாக்கால் சமகால இலங்கை வரலாற்றிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டன. இதனால் தமிழ் நாட்டு அரச வம்சங்களை வெற்றி கொண்டதன் பின்னர் சோழர் இலங்கைக்கு எதிராகவும் படையெடுத்து வந்தனர். இது முதலாம் பராந்தக சோழன்காலத்தில் ஆரம்பித்து பின்னர் இராஜராஜசோழன் காலத்தில் கி.பி. 993இல் இலங்கையின் வடபகுதி வெற்றி கொள்ளப்பட்டது. கி.பி. 1012இல் முதலாம் இராஜேந்திர சோழன் காலத்தில் இலங்கை முழுவதும் வெற்றி கொள்ளப்பட்டு புதிய தலைநகரம் ஜனநாதபுரம் என்ற பெயருடன் பொலநறுவைக்கு மாற்றப்பட்டதாக சோழர்காலச் சான்றுகளால் அறிகின்றோம்.

சோழரின் 77 ஆண்டுகால நேரடி ஆட்சியில் அவர்களது நிர்வாக முறையே பின்பற்றப்பட்டது. இதன்படி இலங்கை மும்முடிச் சோழ மண்டலம் என்ற பெயரைப் பெற்றதுடன் வளநாடு, நாடு, ஊர் போன்ற நிர்வாக அலகுகளும் இங்கு பின்பற்றப்பட்டன.

திருகோணமலையில் மட்டுமே ஐந்து வளநாடுகள் இருந்துள்ளன. அத்துடன் சோழரின் அரசியல், இராணுவ, நிர்வாக நடவடிக்கைகளின் முக்கிய மையமாக திருகோணமலை இருந்ததை அவர்களின் ஆட்சிக்கால ஆதாரங்களும் உறுதிப்படுத்துகின்றன.

பொலநறுவையைத் தலைநகராகக் கொண்ட சோழரின் ஆட்சி கி.பி. 1070இல் வீழ்ச்சியடைந்தாலும் சோழரின் ஆதிக்கம், நிர்வாக முறை, பண்பாடு என்பன தமிழர் பிராந்தியங்களில் தொடர்ந்திருக்கலாம் எனக் கருதமுடிகின்றது. இதை உறுதிப்படுத்தும் புதிய சான்றாகவே கோமரன்கடவலக் கல்வெட்டுக் காணப்படுகின்றது. பொலநறுவையில் சிங்கள மன்னர்களின் ஆட்சி ஏற்பட்டு, ஏறத்தாழ 125 ஆண்டுகளின் பின்னரும் தமிழர் பிராந்தியங்க ளில் மும்முடிச் சோழ மண்டலம் என்ற நிர்வாகப் பெயரும் தமிழ் நிர்வாக முறையும் இருந்தன என்ற புதிய செய்தியை இக் கல்வெட்டுத் தருகின்றது.

கல்வெட்டுப் பொறிக்கப்பட்ட காலத்தில் இந்தப்பகுதியில், சோழர் ஆட்சிக்குப் பொறுப்பாக மூன்றாம் குலோத்துங்க சோழனது படைத்தளபதிகளுள் ஒருவரான அல்லது அரச பிரதிநிதியான குலோத்துங்க சோழக் காலிங்கராயன் இருந்துள்ளான் என்ற புதிய செய்தியும் தெரியவருகின்றது. மேலும் இவனே கங்கராஜகாலிங்க விஜயபாகுவுக்கு (கலிங்கமாகனுக்கு) பட்டாபிஷேகம் செய்தான் என்ற அதிமுக்கிய புதிய வரலாற்றுச் செய்தியும் இந்தக் கல்வெட்டிலேயே முதல் முறையாகச் சொல்லப்பட்டுள்ளது.

பேராசிரியர் சுப்பராயலு இந்தக் கல்வெட்டில் (வரிகள் (35) வரும் 'ஸ்ரீகுலோத்துங்கசோழக் காலிங்கராயன் ஈழமண்டலமான மும்முடி சோழமண்டல மெறிந்தும் கங்கராஜ காலிங்க விஜயவாகு தேவர்க்கு வீராபிஷேகம்' என்ற சொற்தொடரை புதிய செய்தி எனக் குறிப்பிட்டுள்ளார். பேராசிரியர் இந்திரபாலா இந்தத் தொடரில் உள்ள கங்கராஜ காலிங்கவிஜயவாகு என்பவன் 1215 இல் பொலநறுவை அரசை வெற்றிகொண்டு ஆட்சிசெய்த கலிங்கமாகன் (மாகன் மாகோன்) என அடையாளப்படுத்துகின்றார். அவன் விஜயபாகு என்ற பெயராலும் அழைக்கப்பட்டான் என்பதற்கு 14ஆம் நூற்றாண்டில் எழுந்த நிகாயசங்கிரஹய என்ற சிங்கள இலக்கியத்தில் வரும் குறிப்பை முக்கிய ஆதாரமாகக் காட்டியுள்ளார்.

இவற்றிலிருந்து, இலங்கையை வெற்றிகொண்டு பொலநறுவையில் ஆட்சிபுரிந்த கலிங்கமாகன், குலோத்துங்க சோழ காலிங்கராயனால் அபிஷேகம் செய்யப்பட்டு ஆட்சியில் அமர்த்தப்பட்டவன் என்ற புதிய ஆதாரம் கிடைத்துள்ளது. இந்தக் கல்வெட்டில் கூறப்படும் குலோத்துங்க சோழக் காலிங்கராயன் மூன்றாம் குலோத்துங்க சோழன் ஆட்சிக்காலத்தில் இலங்கையில் இருந்த சோழப்படைத் தளபதியாக அல்லது சோழ அரசப் பிரதிநிதியாக இருந்திருக்கவேண்டும். ஏனெனில் மூன்றாம் குலோத்துங்க சோழனது ஆட்சிக்காலத்தில் (கி.பி 1178-1218) அவன் இலங்கை மீது படையெடுத்து சில வெற்றிகளைப் பெற்றதாக அவனது பத்தாவது ஆட்சியாண்டுக் கல்வெட்டுக் கூறுகின்றது.

இங்கே கலிங்கமாகன் பொலநறுவை இராச்சியத்தை கி.பி.1215 இல் வெற்றி கொண்டான் எனக் கூறப்படுகிறது. இதனால் குலோத்துங்கசோழ காலிங்கராயனால் கலிங்கமாகனுக்கு நடத்தப்பட்ட பட்டாபிஷேகம் மூன்றாம் குலோத்துங்க சோழனது ஆட்சியின் இறுதிக் காலப்பகுதியில் நடந்ததெனக் கூறமுடியும்.

(09ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ‘திருமுகம்’ வெளியீடும் விருது வழங்கலும்

யாழ்ப்பாணம்,டிசெ.15

தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத் தலைவரும், சிவபூமி அறக்கட்டளை ஸ்தாபகருமான செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகனின் ‘திருமுகம் 60’ மலர் வெளியீடும், இளைய தலைமுறை ஆற்றலாளர் விருது வழங்கலும் எதிர்வரும் 18ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய அன்னபூரணி மண்டபத்தில் நடைபெறும்.

நிகழ்வில் ஆசியுரைகளை மாவை ஆதீனகர்த்தா மகா ராஜஶ்ரீ து.ஷ.இரத்தினசபாபதி குருக்கள், தெல்லிப்பழை துர்க்காதேவி ஆயல பிரதமகுரு சிவஶ்ரீ சு. செந்தில்ராஜக்குருக்கள், நல்லை ஆதீன குருமுதல்வர் ஶ்ரீலஶ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், கோப்பாய் ஶ்ரீ சுப்பிரமுனிய கோட்டம் ஆன்மிகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் ஆகியோரும், வாழ்த்துரைகளை அகில இலங்கை கம்பன் கழக அமைப்பாளர் கம்பவாரிதி இ.ஜெயராஜ், நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், யாழ்.மாவட்டச் செயலர் க.மகேசன், யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை முன்னாள் தலைவர் பேராசிரியர் சி.சிவலிங்கராஜா, வலி.வடக்கு பிரதேச செயலாளர் ச.சிவஶ்ரீ, தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய உபதலைவர் சி.அருளானந்தசிவம், கணக்காளர் திருமதி கேசினி கோணேஸ்வரன், ஹற்றன் நஷனல் வங்கி பிராந்திய முகாமையாளர் ம.தயாகரன் ஆகியோரும் ஆற்றுவர்.

மலர் வெளியீட்டுரையை துர்க்காபுரம் மகளிர் இல்ல அதிபர் சிவமலர் அனந்தசயனன் ஆற்றுவார். தொடர்ந்து நூலின் முதற்பிரதியை தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய உபதலைவர் லயன். ச.ஆறுமுகநாதன் பெற்றுக் கொள்வார். தொடர்ந்து யாழ்.பல்கலைக்கழ மருத்துவப்பீட பேராசிரியர் திருமதி.கலாமதி முருகானந்தன், யாழ்.போதனா மருத்துவமனை நரம்பியல் சத்திரசிகிச்சை நிபுணர் பொன்னம்பலம் ஆதித்தன் ஆகியோருக்கு இளைய தலைமுறை ஆற்றலாளர் விருது வழங்கப்படும். (ம-4.இ)

## மிருகங்களுக்கு பெயர்சூட்ட சிறுவர்களுக்குச் சந்தர்ப்பம்!



கொழும்பு, டிசெ.15

தேசிய மிருகக்காட்சிச் சாலையில் அண்மையில் பிறந்த ஐந்து விலங்குகளுக்கு பெயர் சூட்டுவதற்கு சிறுவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று தெஹிவளை தேசிய மிருகக்காட்சிச் சாலையின் பணிப்பாளரான ஷர்மிளா ராஜபக்ச தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:

18 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு ஐந்து விலங்குகளுக்கு பெயரிட வாய்ப்பளிக்கப் படவுள்ளது. நீர் யானை, ஓர் அரேபிய ஓரிக்ஸ், இரண்டு குரங்குக் குட்டிகள் மற்றும் ஒரு கழுதைக்குட்டி ஆகியவற்றுக்கே பெயர் சூட்டப்படவுள்ளன. நத்தார் தினத்தன்று பெயர் சூட்டப்படும் என்பதால், டிசம்பர் 20ஆம் திகதிக்குள் பொருத்தமான பெயரைப் பரிந்துரைத்து அனுப்பமுடியும். குட்டி விலங்குக்காக முன்மொழியப்பட்ட பெயர், அனுப்புபவரின் பெயர், வயது, பாடசாலை மற்றும் முகவரி ஆகியவற்றைக் குறிப்பிட்டு 070 698 8448 என்ற எண்ணுக்கு குறுந்தகவல் அனுப்பவேண்டும் - என்றார். (எ-இ)

## முல்லை நகரில் பாலன் குடில்



முல்லைத்தீவு, டிசெ.15

முல்லைத்தீவு நகரின் சுற்றுவட்டத்தில் பாலன் பிறப்பை முன்னிட்டு, முன்னாயத்தமாக பாலன்குடில் அமைக்கப்பட்டுள்ளது. முல்லைத்தீவு பங்குத் தந்தை அகஶ்ரீனின் நெறிப்படுத்தலிலும் முல்லை பங்கு இளைஞர்களின் வழிகாட்டலிலும் பாலன்குடில் அமைக்கப்பட்டு நேற்று வைபவ ரீதியாக வழிபாடுகள் நடத்தப்பட்டன.

இதில் கரைதுறைப்பற்றுப் பிரதேச சபைத் தவிசாளர், கரைதுறைப்பற்றுப் பிரதேசசபைச் செயலாளர், பங்குத் தந்தை மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-19)

## திருவெம்பாவை புத்தகம் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 15

திருவெம்பாவையை முன்னிட்டு திருவாதவூர் அருளிய திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவை புத்தகத்தை மில்க்வைற் தொழிலகத்தில் அன்பளிப்பாகப் பெற்றுக் கொள்ள முடியும் என்று உரிமையாளர் அறிவித்துள்ளார். (ம-4)

## முதலீட்டு சபை தலைவர் எதிரிசூரிய

கொழும்பு, டிசெ.15

இலங்கை முதலீட்டுச் சபைக்கான புதிய தலைவராக ராஜா எதிரிசூரிய நியமிக்கப்பட்டுள்ளார். ஜனாதிபதி ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (எ-இ)



## தமிழ் இராச்சியத்தின்...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொலநறுவை இராசதானியில் நிஸங்க மல்லன் ஆட்சியைத் தொடர்ந்து பல குழப்பங்களும், அயல்நாட்டுப் படையெடுப்புக்களும் ஏற்பட்டதைப் பாளி, சிங்கள இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

இந்தநிலையில் சோழ, கேரள தமிழ்ப்படை வீரர்களின் உதவியுடன் இலங்கைமீது படையெடுத்து வந்த கலிங்கமாகன் 1215இல் பொலநறுவை இராசதானியைக் கைப்பற்றி 44 ஆண்டுகள் வரை ஆட்சி செய்தான் என்ற வரலாறு காணப்படுகின்றது.

இவனது ஆட்சியில் வெறுப்படைந்த சிங்கள மக்களும், சிங்களத் தலைநகரும் தெற்குநோக்கி இடம்பெயர்ந்தபோது கலிங்கமாகன் தலைமையில் வடக்கே இன்னொரு அரசு தோன்றியதாக சூளவம்சம், ராஜவெலிய முதலான வரலாற்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. ஆயினும் இக்கலிங்கமாகன் யார்? எந்த நாட்டிலிருந்து படையெடுத்துவந்தவன் என்பதையிட்டு இதுவரை அறிஞர்கள் மத்தியில் வேறுபட்ட கருத்துக்களே இருந்துள்ளன.

இக்கல்வெட்டின் 810 வரிகளில் வரும் ‘திருக்காமக்கோட்ட நாச்சியாரை எழுந்தருளிவித்துத் திருப்ரதிஷ்டை பண்ணுவித்து’ என்ற சொற்தொடர் இப்பிரதேசத்தில் சக்திக்கென தனிக்கோவில் (காமக்கோட்டம்) அமைக்கப்பட்ட புதிய செய்தியைக் கூறுவதாக உள்ளது. பேராசிரியர் பத்மநாதன் இதுபோன்ற செய்தி இலங்கையில் கிடைத்த பிற தமிழ்க் கல்வெட்டுகளில் இதுவரை காணப்படவில்லை எனக் குறிப்பிடுகின்றார். தமிழகத்தில் இரண்டாம் இராஜராஜ சோழன் காலத்தில் இருந்து சிவன் கோயிலுக்குப் பக்கத்தில் சக்திக்கு தனிக்கோயில் அமைக்கும் மரபு இருந்தமை தெரிகின்றது. அம்மரபு சமகாலத்தில் இலங்கையிலும் பின்பற்றப்பட்டமைக்கு இக்கல்வெட்டு சான்றாகும்.

கோமரன்கடவல சிவன்கோயில் குலோத்துங்கசோழக் காலிங்கராயன் காலத்துக்கு முன்பே பன்னெடுங்காலமாக இருந்திருக்கின்றது என்பதும் கல்வெட்டில் வரும் ஆதிசேஷ்த்ரம் என்ற சொற்தொடரால் தெரிகின்றது.

காலிங்கராயன் ஈழத்தை வெற்றி கொண்டதற்கும் கலிங்கமாகனுக்குப் பட்டம் சூட்டியதற்கும் பிறகு இக்கோயிலுக்கு வந்து வழிபட்டு, சக்திக்காக தனிக்கோயில் எடுப்பித்து, தனக்கு சொந்தமாகக் கிடைத்த நிர்வாகப் பிரிவில் இருந்து சில நிலங்களை நிந்தமாக கொடுத்ததனையே இக்கல்வெட்டுக் குறிப்பிடுகிறது. இந்த நிலங்களுக்கும் கோயில் நிர்வாகத்துக்கும் உரித்துடையவர்களாக ஏற்பாடு செய்யப்பட்டவர்கள் காலிங்கராயன் சொற்படி இக்கல்வெட்டைப் பொறித்திருக்கிறார்கள் என்று தெரிகிறது.

கல்வெட்டின் ஓம்படைக்கிளவியில் குலோத்துங்கசோழக் காலிங்கராயனின் இந்த ஏற்பாடுகளுக்குப் பங்கம் செய்பவர்கள் கங்கைக்கரையில் ஆயிரம் குரால் (கபிலை) பசுக்களைக் கொன்ற பாவத்துக்கும், ஆயிரம் பிராமணர்களைக் கொன்ற பாவத்துக்கும் உட்பட்டு நாயாகவும் காகமாகவும் பிறப்பார்கள் எனக் குறிப்பிட்டு அவற்றின் உருவங்களும் கல்வெட்டுப் பொறிப்புக்கு கீழே கோட்டுருவமாக வரையப்பட்டுள்ளன.

இந்தக் கல்வெட்டால் அறியப்படும் முக்கிய வரலாற்றுச் செய்திகளோடு, அவற்றில் இடம்பெற்றுள்ள சில பெயர்கள், சொற்கள் தொடர்பாக அறிஞர்கள் கூறும் கருத்துக்களும் விளக்கங்களும் தமிழர் வரலாறு பற்றிய ஆய்வில் முக்கியத்துவம் வாய்ந்தனவாகக் காணப்படுகின்றன. முதலில் “ஸ்வயம்புவுமாந திருக்கோ(ணமலை) யுடைய நாயநாரை’ என படிக்கப்பட்டதை பேராசிரியர் இரகுபதி ‘ஸ்வயம்புவுமாந திருக்கோயிலுடைய நாயநாரை’ எனப் படித்திருப்பதை பேராசிரியர் சுப்பராயலு பொருத்தமானதென எடுத்துக்கொண்டுள்ளார். இந்தச் சிவாலயத்தில் காணப்படும் சிவலிங்கத்தின் அமைப்பு ஸ்வயம்பு என்ற சொல்லுக்குப் பொருத்தமாக இருப்பதனால் இக்கல்வெட்டு இந்தக்கோயிலையே குறிப்பிடுகின்றது என்பது பேராசிரியர் இரகுபதியின் விளக்கமாகும். மேலும் அவர் கல்வெட்டில் வரும் இடப்பெயரை ‘லச்சிகாமபுரம்’ என வாசித்து அது இப்பிரதேசத்துக்கு உட்பட்ட ஓர் இடத்தின் பெயர் எனக் குறிப்பிடுகின்றார். இதில் வரும் வேச்சார் நிலம் என்பது குளத்தோடு ஒட்டிய பயிர் நிலம் என்ற பொருளில் சிங்களக் கல்வெட்டுக்களில்வரும் வேசர(வாவி சார்ந்த) என்ற சொல்லுடன் தொடர்புடையது என்பதும் அவரது கருத்தாகும்.

பேராசிரியர் சுப்பராயலு கல்வெட்டில் வரும் ‘மாநாமத்துநாடு’ என்ற பெயர் இங்குள்ள பரந்த பிரதேசத்தை குறித்த இடமாக இருக்கலாம் எனக் கருதுகின்றார். இக்கூற்றை பொருத்தமாகக் கருதும் பேராசிரியர் பத்மநாதன் இதற்குப் பெரியகுளம் கல்வெட்டில் வரும் இதையொத்த பெயரை ஆதாரமாகக் காட்டுகின்றார். இக்கல்வெட்டில் ‘பற்று’ என்ற நிர்வாகப் பிரிவு பற்றிக் கூறப்பட் டுள்ளது. இப்பெயர் சோழர் ஆட்சியில் வளநாடு என்ற நிர்வாகப் பிரிவுக்குச் சமமாகப் பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும் எனப் பேராசிரியர் பத்மநாதன் கருதுகின்றார். பற்று என்ற தமிழ்ச் சொல் சிங்களத்தில் ‘பத்து’ என அழைக்கப்படுகின்றது. இச்சொற்கள் தற்காலத்திலும் இலங்கையின் பல பாகங்களிலும் நிர்வாக அலகுச் சொற்களாகப் பயன்படுத்தப் படுகின்றன.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** வாழ்வில் முன்னேறும் வாய்ப்பு ஒன்று உங்களைத் தேடி வரும். கலைத்துறையினருக்கு புதிய வாய்ப்பு ஒன்று இன்று கிடைக்கும். பல தடைகளையும் தாண்டி எடுத்த செயலில் வெற்றி பெறுவீர்கள்.

**இடபம்:** எதிர்காலம் பற்றிய திட்டம் ஒன்றை வகுப்பீர்கள். நீங்கள் மதிப்பவர்களின் நன்மதிப்பை இன்று பெறுவீர்கள். வியாபாரத்தில் இருந்த தாமதங்கள் நீங்கி வேகம் பிடிக்கும்.

**மிதுனம்:** எதிலும் நிதானத்துடன் செயற்பட்டு வெற்றி பெறுவீர்கள். உண்மையற்ற நண்பர்களிடம் கவனம் தேவை. தாயின் அன்பு கிடைக்கும். வருமானம் திருப்திகரமாக இருக்கும்.

**கடகம்:** சொத்து சம்பந்தமான விடயங்களில் தாமதங்கள் இருக்கும். முக்கிய முடிவு எடுக்கும்போது அனுபவசாலிகளுடன் கலந்தாலோசிக்கவும். பல காலமாக எதிர்பார்த்த தொகையில் ஒருபகுதி கைக்கு வரும்.

**சிம்மம்:** நெருக்கமான ஒருவருடன் இருந்து வந்த மனக்கசப்புகள் மறையும். வாழ்க்கைத்துணையின் முன்னேற்றம் உங்களுக்கு மகிழ்ச்சியைத் தரும். பெரியவர்கள் கூறும் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நலம் தரும்.

**கன்னி:** மனச்சோர்வு நீங்கும். சேமிப்பில் ஆர்வம் அதிகரிக்கும். மனதில் இருந்த கவலை தீரும். முன்னேற்றமான சூழ்நிலையைக் காண்பீர்கள். அங்கீகாரம் கிடைக்கும்.

**துலாம்:** சிலருக்கு அலுவலகமோ, வீடோ மாற்றம் செய்யும் சூழல் உருவாகும். எடுத்த செயலில் வெற்றி பெறுவீர்கள். பரபரப்பான நாள். தொழிலில் இருந்து வந்த தடைகள் அகன்று புதிய வழி பிறக்கும்.

**விருச்சிகம்:** உணர்ச்சிவசப்படாமல் எதையும் அணுகுவது உங்களுக்கு நல்லது. நிறைகுறைகள் பல இருந்தாலும் மகிழ்ச்சியான நாள். சொத்து சம்பந்தமாக மனநிம்மதியும் மகிழ்ச்சியும் அடைவீர்கள்.

**தனுசு:** குடும்பத்தினருடன் ஒருமித்த கருத்து உண்டாகி நிம்மதி அளிக்கும். அலுவலகப் பணியில் கவனம் தேவை. நெருங்கிய உறவினர் உதவி செய்வர். உறவினருடன் இருந்த சண்டை முடிவுக்கு வரும். பணப்பற்றாக்குறை தீரும்.

**மகரம்:** பிறரை நம்பி உங்களது பணிகளை ஒப்படைக்க வேண்டாம். பெரிய தீர்மானம் செய்யும் முன் பிறரிடம் ஆலோசனை கேட்பது நல்லது. நெருங்கிய நண்பர்களுடன் இருந்து வந்த கருத்து வேறுபாடு நீங்கும்.

**கும்பம்:** நற்செய்தி கிடைக்கும். பணியில் முன்னேற்றம் காண்பீர்கள். வருமானம் திருப்திகரமாக இருக்கும். வங்கி தொடர்பான விடயங்களில் மன நிறைவடைவீர்கள். முக்கிய முடிவு எடுப்பதில் பொறுமை அவசியம்.

**மீனம்:** உறவினர்களுக்கு உதவி செய்து மகிழ்ச்சி அடைவீர்கள். நீங்கள் விரும்பி காத்திருந்த இடமாற்றம் இன்று கிடைக்கக்கூடும். குழந்தைகள் வெற்றி அடைந்தது பற்றிய செய்தி வரும்.. தொல்லைகள் நீங்கும்.



## அர்ஜுனுக்கு கொரோனா தொற்று

சென்னை, டிசெ.15

நடிகர் அர்ஜுனுக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

கொரோனா அறிகுறி தென்பட்ட நிலையில் கொரோனாப் பரிசோதனை செய்து கொண்டதையடுத்து அவருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ச)

ஒமிக்ரோன் பரவல்:

# கொண்டாட்டங்களுக்கு தமிழகத்தில் தடை?

### முதலமைச்சர் ஆலோசனை



சென்னை, டிசெ.15

**இந்தியாவில் ஒமிக்ரோன் வைரஸ் தொற்று பரவிவரும் நிலையில் தமிழகத்தில் புத்தாண்டுக் கொண்டாட்டங்களுக்குத் தடைவிதிக்க வாய்ப்பு உள்ளது எனத் தகவல் வெளியாகியுள்ளது.**

தமிழகத்தில் கொரோனா பரவல் நாளுக்குநாள் குறைந்து வருகிறது. ஆனால் உருமாறியுள்ள 'ஒமிக்ரோன்' பற்றிய அச்சம் இன்னும் விலகவில்லை.

இந்த நிலையில் இன்றுடன் தமிழகத்தில் ஊரடங்கு உத்தரவு முடிவடைகிறது.

எனவே தமிழகத்தில் கொரோனாக் கட்டுப்பாடுகள் மற்றும் ஊரடங்கு நீடிப்பு குறித்து சென்னை தலைமைச் செயலகத்தில் உயர் அதிகாரிகளுடன் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆலோசனை நடத்தி வருகிறார்.

இதில் அண்டை மாநிலங்களில் ஒமிக்ரோன் பரவி வரும் நிலையில் தமிழகத்தில் புத்தாண்டுக் கொண்டாட்டங்களுக்குத் தடைவிதிக்க வாய்ப்பு உள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. (ச)

முதலாவதாக

## ஒமிக்ரோனால் ஒருவர் உயிரிழப்பு

இங்கிலாந்தில் முதலாவதாக ஒமிக்ரோன் பாதிப்பால் ஒருவர் உயிரிழந்துள்ளார் என அந்நாட்டு பிரதமர் போரிஸ் ஜோன்சன் தெரிவித்தார்.

தென் ஆப்பிரிக்காவில் புதிய வகை உருமாறிய ஒமிக்ரோன் கொரோனா வைரஸ் கண்டறியப்பட்டது. அந்த வைரஸ் மற்ற உருமாறிய வைரஸ்களைவிட வேகமாகப் பரவும் தன்மை கொண்டது என்று உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

உலகளவில் இதுவரை 63 நாடுகளில் ஒமிக்ரோன் வைரஸ் பரவியுள்ளது. இந்த நிலையில் இங்கிலாந்தில் ஒமிக்ரோன் தொற்றால் ஒருவர் உயிரிழந்துள்ளார் என அந்த நாட்டு பிரதமர் போரிஸ் ஜான்சன் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து ஒமிக்ரோன் வைரஸ் பரவலை அடுத்து இங்கிலாந்தில் அவசர நிலை பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ச)

## குரங்குக்கு முதலுதவி; காப்பாற்றினார் சாரதி



சென்னை, டிசெ.15

பெரம்பலூரில் சாலையில் அடிபட்டுச் சாக கிடந்த குரங்கை ஓட்டோ சாரதி ஒருவர் காப்பாற்றிய காணொலி சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகின்றது.

பெரம்பலூரை சேர்ந்த இவர் வழக்கம்போல வாடகை சவாரிக்காகச் சென்று கொண்டிருந்தபோது அந்த சாலையில் குரங்கு ஒன்று வாகனம் மோதியதால் அடிபட்டு உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தது. உடனடியாக ஓடிச் சென்று அந்தக் குரங்குக்கு முதலுதவிகள் செய்த ஓட்டோ சாரதி அந்தக் குரங்கை உயிருடன் காப்பாற்றியுள்ளார். இந்தச் சம்பவத்தை அந்தப் பகுதி வழியாகச் சென்ற சிலர் காணொலி எடுத்து சமூக வலைதளங்களில் பதிவிட்டுள்ளனர்.

உயிர்களிடம் கருணைகாட்டிய ஓட்டோ சாரதியை பாராட்டிப் பலரும் அந்தக் காணொலியை ட்ரெண்ட்டாக்கி வருகின்றனர். (ச-இ)

## இன்னும் 'மோசம்' டெல்லி காற்று மாசு

புதுடில்லி, டிசெ.15

டில்லியில் காற்றுமாசு நிலை இன்னும் 'மோசம்' என்ற அளவில் காணப்படுகிறது என தெரிவிக்கப்படுகிறது. இதனால் மக்கள் சிரமத்துக்கு உள்ளாகியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

டில்லியில் கடந்த மாதம் 3ஆவது வாரத்தில் இருந்தே காற்று மாசு தரநிலை மிகவும் மோசமாக இருந்து வருகிறது. முதலில் மிகமிக மோசம் என்ற நிலையில் இருந்ததால் பாடசாலைகள் மூடப்பட்டன. கட்டுமான பணிகள் நிறுத்தப்பட்டன. தொழிற்சாலைகளுக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.

இந்தநிலையில் இன்றுவரை காற்றின் தரநிலையில் மிகப்பெரிய அளவில் முன்னேற்றம் இல்லை. நேற்று காற்றின் தரக் குறியீடு 256 என்ற 'மோசம்' நிலையில்தான் உள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச)



## குடும்பத்தினரை கொலைசெய்தவர் சடலமாக மீட்பு

புதுடில்லி, டிசெ.15

ஒமிக்ரோன் தொற்று யாரையும் விட்டு வைக்காது எனக் கடிதம் எழுதி வைத்து விட்டு குடும்பத்தினரைக் கொடூரமாகக் கொன்ற மருத்துவர் பிணமாக மீட்கப்பட்டுள்ளார்.

உத்தரப்பிரதேச மாநிலம் கான்பூரில் உள்ள கல்யாண் பூரில் உள்ள தனியார் மருத்துவ கல்லூரி ஒன்றில், தடயவியல் பேராசிரியராகப் பணிபுரிந்து வந்த மருத்துவர் தனது மனைவி மற்றும் இரு பிள்ளைகளைக் கடந்த 3ஆம் திகதி கொடூரமாகக் கொலை செய்தார். பின் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார். இந்த நிலையில், கான்பூர் மாவட்டம் சித்நாத் ஹட் பகுதியில் அழுகிய நிலையில் மருத்துவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்சி சார்பான முரண்பாடுகளால் மாநகர முதல்வரை இழந்துவிடாதீர்கள்!

## விக்னேஸ்வரன் எம்.பி. சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், டிசெ. 15

யாழ்.மக்களின் நலன் பற்றியோ, வருங் காலம் பற்றியோ சிந்திக்காது எடுக்கப்ப டும் நடவடிக்கைகள் பெரும் பின் விளை வுகளை ஏற்படுத்தும். வெறும் கட்சி சார்பான முரண்பாடுகளால் தகுதி வாய்ந்த, யாழ்.மாநகர முதல்வரை இழக்க நாங்கள் இடமளிக்கக்கூடாது. இவ்வாறு, யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் குறிப் பிட்டார்.

இது தொடர்பில் அவர் அனுப்பிய செய் திக் குறிப்பில்,

வரவு - செலவுத் திட்டத்தை தோற்கடிப்ப தால் நகரபிதா வி.மணிவண்ணனை வெளியேற்றலாம் என்ற எண்ணத்தில் சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவரு வதை நான் அறிவேன். மக்கள் பிரதி நிதிகள் தங்கள் சொந்த நலன்களுக்கு, விருப்பு வெறுப்புகளுக்கு முதலிடம் கொடுப்பதால்தான் இவ்வாறான சிந்த னைகள் மேலோங்குகின்றன.

மணிவண்ணன் எங்கள் கட்சி உறுப்பி னர் அல்லர். ஆனால், அவர் மக்கள் சேவை செய்வதில் ஆர்வம் கொண்டவர். தமிழ் மக்களின் சிந்தனையை தகுந்த விதத்தில் உள் நாட்டவர்களிடமும் வெளி நாட்டவர்களிடமும் கொண்டு செல்லக் கூடியவர்.

அவரின் திறனும் - அறிவும் - ஆற்றலும் ஆளுமையும் மற்றைய உறுப்பினர்கள் எத்தனை பேரிடம் இருக்கின்றது என் பதை உறுப்பினர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இந்தக் காலகட்டம் நெருக்கடிமிக்கது. அறிவு, ஆளுமை, அதிகாரம் கொண்ட வர்களை நாங்கள் பதவி இழக்கச் செய்வோமானால் அரசாங்கத்தின் கர வான நடவடிக்கைகளைக் கண்டிக்க முடியாமற்போய்விடும். எனக்கு மணி வண்ணனைத் தனிப்பட்ட முறையில் அதிகம் தெரியாது. ஆனால் அவரின் செயல்கள் - பேச்சு கள் அவரை எனக்கு அடையாளப்படுத்தி யுள்ளன.

தயவுசெய்து பதவி யில் இருக்கும் நகர பிதாவை கட்சிக் கார ணங்களுக்காக வெளியேற்றாதீர்கள் என்று, யாழ். மாந கர சபையின் அனைத்து உறுப்பி னர்களிடமும் அன் பான கோரிக்கை ஒன்றை முன்வைக் கின்றேன் - என்று குறிப்பிட்டுள்ளார். (த)


## மரண அறிவித்தல்

தோற்றம் 10 . 03 . 1926



மறைவு 14 . 12 . 2021

**கந்தையா சின்னம்மா**

மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகவும் அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சின்னம்மா அவர்கள் நேற்று (14.12.2021) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.12.2021) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 11.00 மணிக்கு தகனக்கிரியைக்காக கேணிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கூட்டுறவாளர் வீதி,**
**அளவெட்டி மத்தி,**
**அளவெட்டி.**

**தகவல் :**
**குடும்பத்தினர்.**
**076 171 3787**

(CS 880)1-6

## மரண அறிவித்தல்

தோற்றம் 17 . 11 . 1932



மறைவு 14 . 12 . 2021

**இராசையா சரஸ்வதி**

மானிப்பாய் பொன்னம்பலம் ஒழுங்கையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா சரஸ்வதி நேற்று (14.12.2021) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சின்னத்தம்பி இராசையாவின் அன்பு மனைவியும், லிங்கேஸ்வரி (ஜேர்மனி), காலஞ்சென்ற மாலினி (ஆசிரியர்), சாந்தினி (லண்டன்), ஜெயந்தி (ஜேர்மனி), சுகந்தினி (ஆசிரியர்- யா/உடுவில் மல்வத்தை றோ.க.த.க. பாடசாலை) ஆகியோரின் அன்பு தாயாரும், இரவீந்திரன் (ஜேர்மனி), காலஞ்சென்ற ஸ்ரீபத்மநாதன், தர்மமூர்த்தி (லண்டன்), சர்வலோகதயாபரன் (ஜேர்மனி), அருள்வதனன் (ஆசிரியர்- யா/ இணுவில் மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியும், பிரசாத்- சீமா (ஜேர்மனி), அரோஷன் - கவிதா (ஜேர்மனி), தனுஷன் - நிஷா (ஜேர்மனி), பிருத்தியா - மிதுனன் (லண்டன்), த.துவாரகா (லண்டன்), த.சாருஜன் (லண்டன்), றொசானி (பிரதி முகாமையாளர் - மக்கள் வங்கி, வவுனியா) - லியோஷன் (Executive officer - NDB Bank - Batticalo), விஜிதன் (லண்டன்), நிரோஷன் - லக்ஷி (ஜேர்மனி), த.அனோஷன் (ஜேர்மனி), டினோஷன் (ஆசிரியர் - யா/இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி) - சுபேதா (பிரதேச சபை - தெல்லிப்பளை), அ.பிரியங்கா (சித்தமருத்துவ மாணவி) ஆகியோரின் அன்பு பேர்த்தியும், அலியா, அவ்னிஷ், ஜெஸ்வின், நிலானா, லியான், பர்நிதியோஷ்னி, நிவாஷினி ஆகியோரின் அன்பு பூட்டியும, காலஞ்சென்றவர்க ளான அன்னலட்சுமி, காங்கேசு, சிவபாக்கியம் மற்றும் நவரட்ணம் (கனடா), கோகிலா தேவி (மானிப்பாய்), கிருஷ்ணபவானி (லண்டன்), ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.12.2021) புதன்கிழமை 02.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 410 3005, 021 225 6056**

(CS 881)

## பாராட்டி வாழ்த்துகிறோம்

தேசிய ரீதியில் நடாத்தப்பட்ட அரச அலுவலகங்களுக்கான **தேசிய உற்பத்தி திறன் விருது 2020** போட்டியில் **யாழ்ப்பாணப் பிரசே செயலகம்** முதன் முறையாக **இரண்டாம்** இடத்தினைப் பெற்று சாதனை படைத்துள்ளது. குறுகிய காலத்தில் பல சாதனைகளை நிலைநாட்டிய பிரதேச செயலகத்திற்கு கிடைத்த இந்த வெற்றிக்கு உழைத்த பிரதேச செயலாளர் மற்றும் உத்தியோகத்தர்கள் அனைவரையும் மனமார பாராட்டி வாழ்த்துகின்றோம்.




*மனமாரவாழ்த்தும்*
**மீனாட்சி சனசமூக நிலையம்**
**கொட்டடி சனசமூக நிலையம்**
**கொட்டடி வாழ் மக்கள்.**

(CR 57791)-6

## ஆலய சேவையாளர் தேவை

**திருகோணமலையில் அமைந்துள்ள**
**ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி தேவஸ்தானத்திற்கு**
**ஆலய மண்டப பணிக்கும் மடப்பள்ளி**

**சேவைக்கும் (பிராமணர்)** உடனடியாக ஆள்கள் தேவைப்படுவதனால், தகுதியானவர்கள் எம்மை கீழ்காணும் தொலைபேசியிலக்கத்னூடு தொடர்புகொள்ளவும். கவர்ச்சியான ஊதியம் மற்றும் தங்குமிட வசதிகள் செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு: **075 041 4756**
**077 795 0235**

(cr.36701) (2.6)

## கீரிமலையில் அமைக்கப்பட்ட பாரம்பரிய உணவகத்தில் பாரம்பரிய உணவினை தயாரித்து விற்பனை செய்வதற்கான விண்ணப்பம் கோரல்

வலிகாமம் வடக்கு பிரதேச சபைக்குட்பட்ட கீரிமலையில் அமைக்கப்பட்டுள்ள பாரம்பரிய உணவகத்தில் பாரம்பரிய உணவுகள் / சிற்றுண்டிகள் என்பவற்றை தயாரித்து விற்பனை செய்வதற்கு யாழ். மாவட்டத்தை வதிவிடமாக கொண்ட ஆர்வமுடையோர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பொது நிபந்தனைகள்**

01 குறித்த உணவகத்தில் வைத்தே சகல உணவுகளும் தயாரிக்கப்படல் வேண்டும்.
02 பாரம்பரிய உணவு சிற்றுண்டி மட்டுமே தயாரித்து விற்பனை செய்ய முடியும்.
03. பெண்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.
04. 08 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு உணவு உற்பத்தி விற்பனைக்கு இட ஒதுக்கீடு மேற்கொள்ளப்படும்.
05. சமையலுக்கு தேவையான சகல தளபாட உபகரண வசதிகளும் சபையால் வழங்கப்படும்.
06. வயது எல்லை 18 தொடக்கம் 60 வயது வரையாகும்.
07. உடல் உள ரீதியாக ஆரோக்கியமாக உள்ளவர் என்பதை அரச மருத்துவர் ஒருவரிடம் பெற்ற மருத்துவ சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்.
08. பெண்களை தலைமைத்துவமாக கொண்ட குடும்பங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
09. நேர்முகத் தெரிவு ஒன்றின் மூலம் தெரிவு இடம்பெறும்.

இதற்கான விண்ணப்பங்களை வலிகாமம் வடக்கு பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் 15.12.2021ஆம் திகதி முதல் பெற்று பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவங்களை 28.12.2021ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன் கிடைக்கக்கூடியதாக தவிசாளர், வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை என்ற முகவரிக்கு நேரடியா கவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்க வேண்டும். மேலதிக விபரங்களுக்கு வலிகாமம் வடக்கு பிரதேச சபை தலைமை அலுவலகத்தை நேரடியாகவோ அல்லது 0212241130 என்ற தொலைபேசி இலக்கத்தின் மூலமோ அணுகி தகவல்களை பெற்றுக் கொள்ள முடியும்.

**தவிசாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை,**
**காங்கேசன்துறை.**
**15.12.2021**

(cr.36729) (2.6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## கணேஸ் செல்வராசா

மலர்வு 22.08.1953 — உதிர்வு 25.12.2020

ஆண்டு ஒன்று ஆகிவிட்டது - அப்பா!
ஆறவில்லையே எங்கள் மனம்
நோயுற்ற போதும் கூட உடனிருந்து
அறிவுரைகள் கூறுவீர்கள் அப்பா!
மலைபோல் துன்பம் வந்த போதெல்லாம்
மௌனமாய் இருப்பீர்களே
பேரப்பிள்ளைகளுடன் கொஞ்சி
விளையாட விடாமல் கூட காலனவன்
- கூப்பிட்டானே
நீங்கள் இல்லை என்றாலும் ஆத்மாவாக
இருந்து நாங்கள் வாழும்வரை வழிநடத்துவீர்கள்
- அப்பா!


மனைவி - சிவனேஸ்வரி
பிள்ளைகள் - கபிலன், சுஜீபன், கோபிணா, கோகுலன்
மருமக்கள் - குருபரன், அனு
பேரப்பிள்ளைகள் - அட்சரா, அனனிகா

ஏழாலை மேற்கு,
ஏழாலை.

(cr 36724) (2.6)

# மரண அறிவித்தல்

## திரு.நாகேந்திரர் அம்பிகாபதி



பிறப்பு : 09.11.1940 இறப்பு : 14.12.2021

யாழ்.வேலணை சரவணை கிழக்கு 9ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கே.கே.எஸ் றோட், செங்கமல வாசா கொக்குவில் கிழக்கு, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. நாகேந்திரர் அம்பிகாபதி அவர்கள் நேற்று (14.12.2021) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகேந்திரர் - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - கமலம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற மீராவின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான வேலாயுதபிள்ளை, மனோன்மணி, அருமைநாயகம், தியாகராசா மற்றும் நாகநாத பிள்ளை, காலஞ்சென்றவர்களான தாட்சாயினி, தவராசா, பாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான தவ மணி, பசுபதிப்பிள்ளை மற்றும் தவமணிதேவி, காலஞ்சென்றவர்க ளான தாமோதரம்பிள்ளை, ஞானாம்பிகை மற்றும் மனோரஞ்சிதம், காலஞ்சென்ற பரமசுந்தரம் மற்றும் இராஜேஸ்வரி (குஞ்சு- லண்டன்), குகானந்தன் ஆகியோரின் மைத்துனரும், காலஞ் சென்ற அருட்சோதி மற்றும் செந்தில்குமார் (அருண்) காயத்திரி, மேகலா, சுஜீவா (மீனா), அம்பிகை (ரேவதி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பஞ்சலிங்கம், தினேஷ்குமார், ரவீந்திரராசா, முருகதாஸ் ஆகியோரின் அன்பு மாமனாரும், லதுஷன், தாட்சாயினி, சஞ்ஜித், யக்ஷிகா, கோபிஷன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.12.2021) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற் பகல் 10.00 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கே.கே.எஸ். றோட்,
செங்கமலவாசா,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்.
மகன்- செந்தில்குமார் (அருண்)
077 977 2232

(CS 41614) 1/6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள் கேள்வி அறிவித்தல் - 2022
## வலிகாமம் தென்மேற்குபிரதேச சபை, மானிப்பாய்.

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையின் அதிகார எல்லைக்குட்பட்ட. கீழ்க்குறிப்பிடப்படும் பொதுச்சந்தைகள். துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்புநிலையம் .இறைச்சிக்கடைகள் மற்றும் கருவாட்டுக்கடை என்பவற்றை 2022.01.01 ஆம் திகதி தொடக்கம் 2022.12.31 ஆம் திகதிவரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| கேள்விப்பத்திரம் வழங்கும் இறுதித் திகதி | : 28.12.2021 மதியம் 12.00 மணிவரை |
| கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி | : 28.12.2021 பி.ப 2.00 மணிவரை |
| கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி | : 28.12.2021 பி.ப 2.30 மணி |
| கேள்விப்பத்திரம் திறக்கப்படும் இடம் | : வலிகாமம் தென்மேற்கு பிரதேசபை. தலைமை அலுவலகம். மானிப்பாய். |

| இல | பொதுச் சந்தைகள்,(துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்புநிலையம்,பொதுமலசலகூடம்). இறைச்சிக்கடைகள் விபரம் | மீளளிக்கப்படா தகேள்விப்பத் திரப் பணம் | மீளளிக்கப்படும் கேள்விவைப்புப் பணம் | ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த தொகை | மாதாந்த வாடகை |
|---|---|---|---|---|---|
| மானிப்பாய் பட்டின உப அலுவலகம் | | | | | |
| 01 | மானிப்பாய் பொதுச் சந்தை கோழியிறைச்சிக்கடை (புதியகட்டிடத் தொகுதி) | 1,000.00 | 2,500.00 | 322,525.00 | 600.00 |
| 02 | மானிப்பாய் பொதுச் சந்தை கருவாட்டுக்கடை அல்லதுமாமிசம் பதனிடும் கடை(புதியகட்டிடத் தொகுதி) | 1,000.00 | 5,000.00 | 9,130.00 | 600.00 |
| மானிப்பாய் கிராம உப அலுவலகம் | | | | | |
| 01 | காக்கைதீவுப் பழையமீன் சந்தைக் கட்டிடம் . (கடலுணவுகள் களஞ்சியப்படுத்துவதற்கு மாத்திரம்) | 500.00 | 1.500.00 | 21,850.00 | |
| 02 | நவாலி பிரசாத் சந்தை கோழியிறைச்சிக்கடை | 500.00 | 1,500.00 | 19,950.00 | 300.00 |
| 03 | சாவற்கட்டுச் சந்தை | 1,000.00 | 3,500.00 | 288,850.00 | |
| 04 | ஆனைக்கோட்டைச்சந்தி மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 5,000.00 | 285,090.00 | |
| பண்டத்தரிப்புபட்டின உப அலுவலகம் | | | | | |
| 01 | பண்டத்தரிப்புப் பொதுச் சந்தை | 1,000.00 | 18,000.00 | 2,300,680.00 | |
| 02 | பண்டத்தரிப்புப் பொதுச் சந்தை கோழியிறைச்சிக்கடை | 1,000.00 | 5,000.00 | 491,150.00 | 2,250.00 |
| பண்டத்தரிப்புகிராம உப அலுவலகம் | | | | | |
| 01 | மாகியப்பிட்டிப் பொதுச் சந்தை | 1,000.00 | 2,000.00 | 201,190.00 | |
| 02 | இளவாலைப் பொதுச் சந்தை கோழியிறைச்சிக்கடை | 1,000.00 | 1,500.00 | 91,960.00 | |
| 03 | மாதகல் பொதுச் சந்தை | 1,000.00 | 3,000.00 | 263,340.00 | |
| 04 | மாதகல் பொதுச் சந்தை கோழியிறைச்சிக்கடை | 500.00 | 1,500.00 | 24,880.00 | 750.00 |

கேள்வி சம்பந்தமான மேலதிக விபரங்களை 2021.10.29 ஆம் திகதிய உதயன், தினக்குரல் பத்திரிகைகளிலும், தலைமைஅலுவலகம், உப அலுவலகங்களிலும் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**அ.ஜெபநேசன்,**
**தவிசாளர்,**
**வலிகாமம் தென்மேற்குபிரதேச சபை, மானிப்பாய்.**
**2020.12.15**

(cr.36727) (2.6)

## ஆதன உரிமை மாற்ற அறிவித்தல்
## வலிகாமம் வடக்கு பிரதேசசபை
## உப அலுவலகம் - தெல்லிப்பளை

**விண்ணப்பதாரர் - சுதர்சினி காங்கேயன்**
முகவரி -15,5/4 Lotus Apt, Frances Road, Wellawatta

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் வடக்கு பிரதேசசபை, தெல்லிப்பளை உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் 13 கட்டுவன் வீதியில் அமைந்துள்ள தெல்லிப்பளை கோவிற்பற்றும் இறையுமான "கலந்தலை கலட்டியும் பள்ளகலட்டியும்" சொரியலாய் நிலப்பரப்பு 03 குழி 02 இல் 1/5 பங்கு கொண்ட ஆதனமானது இல 22/13 இல் சுப்பிரமணியம் பெண் மகேஸ்வரி என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனமானது 2017ம் ஆண்டு ஜனவரி மாதம் 07ம் திகதி பிரசித்த நொத்தாரிஸ் திரு.ரட்ணம் ரகுராஜா முகதாவில் 8522 ஆம் இலக்கத்தில் சுதர்சினி காங்கேயன் மூலம் நிறைவேற்றப்பட்ட வெளிப்படுத்தல் உறுதிக்குரிய ஆதனமானது அதே நொத்தாரிசு முகதாவில் 2016ம் ஆண்டு ஜனவரி மாதம் 25ம் திகதி 7803 இலக்கத்தில் நிறை வேற்றப்பட்ட நன்கொடை உறுதிப்படி சுபத்திராதேவி விவேகானந்தன். சுப்பிரமணியம் சிறிதில்லேஸ்வரன். சுப்பிரமணியம் சிறிகணேஸ்வரன். சுப்பிரமணியம் சிறிபரமேஸ்வரன். சுப்பிரமணியம் சிறிகாங்கேஸ்வரன் ஆகியோர் அற்றோனித் தத்துவக்காரர் சிறிகாங்கேஸ்வரன் மூலம் சுதர்சினி காங்கேயன் என்பவருக்கு நன்கொடையளித்திருந்தனர். மேலே குறிப்பிடப்பட்ட 7803 இலக்க உறுதியில் நன்கொடை கொடுப்பவரின் தாயாராகிய சுப்பிரமணியம் மகேஸ்வரிக்கு 1929ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 10ம் திகதி 1036 இலக்க உறுதி மற்றும் 1958ம் ஆண்டு ஆகஸ்ட் 23ம் திகதிய 5437 இலக்க உறுதி மூலமும் உரித்தானது எனவும் குறித்த சுப்பிரமணியம் மகேஸ்வரியம்மா இறக்க அவரின் பிள்ளைகளான சுபத்திராதேவி விவேகானந்தன். சுப்பிரமணியம் சிறிதில்லேஸ்வரன். சுப்பிரமணியம் சிறிகணேஸ்வரன். சுப்பிரமணியம் சிறிபரமேஸ்வரன். சுப்பிரமணியம் சிறிகாங்கேஸ்வரன் ஆகியோருக்கு வந்தடைந்துள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது.

**ஆதன விபரம்.**
வடமாகாணம். யாழ்ப்பாண மாவட்டம். வலிகாமம் வடக்கு பிரதேசசபை தெல்லிப்பளை கோவிற்பற்றும் இறையுமான "கலந்தலை கலட்டியும் பள்ளகலட்டியும்" நிலப்பரப்பு 03 குழி 02 இல் சொரியலாய் 1/5 பங்கு - இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் M.சண்முகநாதன் அவர்கள் வரைந்த 1916/2016.10.01 .இலக்க திகதிய வரைபடத்தின்படி துண்டு - 01 ஆக காட்டப்பட்டுள்ளது. இதன் எல்லைகள்

கிழக்கு - ஒழுங்கை
வடக்கு - குழந்தைவேலு சொக்கலிங்கமும் மற்றையோரினுடைய ஆதனம்
மேற்கு - கண்ணப்பரின் ஆதனம்
தெற்கு - வலிவடக்கு கூட்டுறவுச்சங்கத்தின் ஆதனம்

மேற்குறித்த ஆதனத்தை சுதர்சினி காங்கேயன் எனும் பெயரில் பெயர் மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் பெயருக்கு பெயர்மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**சோமசுந்தரம் சுகிர்தன்**
**தவிசாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)**

(aco 17662) (2.6)

# மரண அறிவித்தல்

பிறப்பு
21
.
03
.
1965



இறப்பு
14
.
12
.
2021

## செல்லத்தம்பி ஞானவரோதயன் (உதயன்)
(செல்லத்தம்பி களஞ்சிய உரிமையாளர் - சாவகச்சேரி)

தனங்கிளப்பு சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் விடத்தற்பளையை வதிவிடமாகவும் கொண்ட செல்லத்தம்பி ஞானவரோதயன் நேற்று (14.12.2021) செவ்வாய்க்கிழமை அதிகாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்தம்பி - புவனேஸ்வரி தம்பதியரின் கனிஸ்ட புத்திரனும். விடத்தற்பளையை சேர்ந்த கிருஸ்ணபிள்ளை - கமலாம்பிகை தம்பதியரின் அன்பு மருமகனும். கோகுலவதனா அவர்களின் அன்புக் கணவரும். நிரோஷன் (மருத்துவர்-நெதர்லாந்து). கபிலன் (பொறியியலாளர் நெதர்லாந்து) ஆகியோரின் அன்பு தந்தையும். சிவபாலன். விவேகனாந்தம். சிவஞானம் (அமரர்). விஜயலட்சுமி. தாம்பிரவர்ணன். வரதாராஜன். மகேஸ்வரி. தயாபரன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும். கோகுலவனஜா. ஜெயமாலினி. துஸ்யந்தி. தனஞ்செயன். கலாநிதி சடகோபன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.12.2021) வியாழக்கிழமை நண்பகல் 12.30 மணியளவில் விடத்தற்பளையில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சம்பவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

T.P.: 077 127 2392
077 100 6806

தகவல்
குடும்பத்தினர்

(cs876) (2.6)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
21
.
03
.
1955



மறைவு
16
.
11
.
2021

## சிதம்பரநாதர் சச்சிதானந்தன்
( ஓய்வு நிலை கிராமசேவகர் )

கடந்த 16.11.2021 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர் அமரர் சிதம்பரநாதர் சச்சிதானந்தன் அவர்களின் மரணச்செய்தி கேட்டு நாம் துயருற்று இருந்த வேளையில் நேரில் வந்தும். தொலைபேசியூடாகவும். முகநூல். மின்னஞ்சல். RIPBOOK ஆகியவை மூலமாகவும். எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும். அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும். மலர்வளையங்கள். மலர் மாலைகள் சாத்தியவர்களுக்கும். உற்றார். உறவினர். நண்பர்கள் மற்றும் இன்றுவரை எமக்கு சகல உதவிகளையும் செய்த அன்பு நெஞ்சங்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக்கிரியை 13.12.2021 திங்கட்கிழமை அன்று கீரிமலையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்தியை இன்று (15.12.2021) புதன்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !

மாசேரி
வரணி.

குடும்பத்தினர்
தொடர்புகளுக்கு: 0094772478794

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உளமார உவகையடைகிறோம்

**உயர்திரு. க. ஸ்ரீமோகனன் - SLAS**

மேலதிக அரசாங்க அதிபர் - கிளிநொச்சி

Attorney -at - Law
M.Phil.(Geography),
MPA, MA (Pop.Study),
LL.B., BA,
Dip.in e-gov.




**இன்றைய தினம்**
**(15.12.2021)**

மேன்மைதகு பிரதம நீதியரசர் முன்னிலையில்
இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின்
**உயர்நீதிமன்ற சட்டத்தரணியாக**
**சத்தியப் பிரமாணம்** செய்து கொள்வதையிட்டு
அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: **நண்பர்கள்**

(cs.41613) (2.6)



# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் திருமதி
**நாகலிங்கம் சரஸ்வதி**

**திதி: 15.12.2021**

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து
நீங்கள் விண் நோக்கிச் சென்று
மூன்றாண்டுகள் சென்றாலும்
கண் விட்டு மறையாது
உங்கள் நினைவுகள்

**உங்கள் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்**

அத்தியடி, யாழ்ப்பாணம். குடும்பத்தினர்



# அந்தியேட்டி வீட்டுக் கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த (16.11.2021) அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்
**அமரர் வயிரமுத்து கோவிந்தபிள்ளை**
(ஓய்வுபெற்ற உதவிப் பதிவாளர்,
யாழ். பல்கலைக்கழகம்)
அவர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நிகழ்வுகள்
நாளை மறுதினம் (17.12.2021) வெள்ளிக்கிழமை
முற்பகல் 11.00 மணியளவில் **இராமநாதன் வீதி,**
**ராஜா கிறீம் ஹவுஸ் சரஸ்வதி**
**மண்டபத்தில்** நடைபெறும்.

அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**(இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)**

எமது குடும்பத் தலைவரை இழந்து தவித்த வேளையில் எமக்கு கண்ணீர் அஞ்சலிகள், மலர் வளையங்கள், பனர்கள் வெளியிட்டு ஆறுதல் அளித்தவர்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவி செய்து இறுதிக்கிரியைகளில் காலந்துகொண்ட உற்றார், உறவினர், அயலவர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**158, பொற்பதி வீதி,**
**கோண்டாவில்.** (cs.867) (2.6)

**மனைவி,**
**பிள்ளைகள்.**



# 20ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
24 . 09 . 1953



மறைவு
27 . 11 . 2001

அமரர்
**ரேவதிதேவி அருள்ராசலிங்கம்**

திதி: 15.12.2021

அன்பு வழியில் எம்மை அரவணைத்து
ஆருயிராய் நேசித்து ஆசீர்வதித்து
இன்பமிக நல்லறமாம் இல்லறத்தை
ஈடேற்றிய எம்மிதயத் தெய்வமே!

குப்பிளான் தெற்கு, ஏழாலை. கணவர் - சி.அருள்ராசலிங்கம் தம்பி, தங்கை.

(cs 41599)(2.6)



# 31ஆம் நாள் நினைவலைகளும் நன்றி நவிலலும்



**திருமதி மேரி றீற்றா பாலேந்திரா**
(ஓய்வுநிலை ஆசிரியை)

**அன்னை மடியில்** 25.05.1935
**மண்ணின் மடியில்** 15.11.2021

நாரந்தனையில் பிறந்தீர்கள்
அழகும் அறிவும் ஒருங்கமையப் பெற்றீர்கள்
அக்கா, தம்பி, தங்கையுடன் வளர்ந்தீர்கள்
இருபது வயதில் ஆசிரியப் பணியை ஏற்றீர்கள்
நன் மக்கள் நால்வருக்குத் தாயாகினீர்கள்
சீரும் சிறப்புமாக வாழ வழி வகுத்தீர்கள்
பேரப்பிள்ளைகளின் அதி உயர் கல்வித் தகைமையால்
உள்ளம் பூரித்தீர்கள்
எல்லோர் மீதும் பாச மழை பொழிந்தீர்கள்
எண்பத்தாறு ஆண்டுகள் வளமுடன் வாழ்ந்தீர்கள்
இன்று உங்கள் பிரிவைத் தாங்காது
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
பெறாமக்கள் தங்கை யாவரும் தவிக்கின்றோம்
உங்கள் ஆன்மா சாந்திபெற பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் இழப்பால் நாம் துயருற்று இருந்த வேளையில் நேரில் வந்தும், தொலைபேசி, முகநூல் RIPBOOK மூலம் எமக்கு ஆறுதல் கூறி அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், மலர் வளையங்கள் சாத்தியவர்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் 31 ஆம் நாள் ஆத்ம சாந்தி வழிபாடு நாரந்தனை புனித பீற்றர் ஆலயத்தில் இன்று (15.12.2021) புதன்கிழமை காலை 8.30 மணியளவில் நடைபெறும். மதியபோசன நிகழ்வு 90/7, பொற்பதி வீதி, கொக்குவிலில் நடைபெறும்

**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்,**
**பெறாமக்கள், தங்கை.**

(cs.41607) (2.6)


# கடற்படை வாகனம் மீது கல் வீச்சு



யாழ்ப்பாணம், டிசெ. 15

யாழ்ப்பாணம் தபால் நிலையத்துக்கு முன்பாக நிறுத்தப்பட்டிருந்த கடற்படைக்கு சொந்தமான வாகனம் மீது கல்வீச்சு நடத்தப்பட்டுள்ளது.

அதனால், குறித்த வாகனத்தின் முன் பக்க கண்ணாடி பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

இனந்தெரியாதவர்கள் கல் வீச்சு நடத்தியுள்ளனர். பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். (த-20,26,27,125)

# இலங்கையில் அதிகரித்தது கடன் அட்டை எண்ணிக்கை

கொழும்பு, டிசெ. 15

இலங்கையில் 2021 செப்ரெம்பர் மாதத்தில் பயன்படுத்தப்பட்ட 18 லட்சத்து 56 ஆயிரத்து 191 கடன் அட்டைகளின் எண்ணிக்கையானது நவம்பர் மாத இறுதியில் 18 லட்சத்து 94 ஆயிரத்து 128ஆக அதிகரித்துள்ளது.

இலங்கையில் கடந்த ஒக்ரோபர் மாதம் பயன்படுத்தப்பட்ட 62 ஆயிரம் கடன் அட்டைகளை வங்கிகள் இரத்துச் செய்துள்ளன.

62 ஆயிரம் கடன் அட்டைகளை இரத்துச் செய்த போதிலும் புதிய கடன் அட்டைகள் விநியோகிக்கப்பட்டுள்ளதன் காரணமாகவே நவம்பர் மாதம் எண்ணிக்கை அதிகரித்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒருமாத காலத்தில் 37 ஆயிரத்து 937 கடன் அட்டைகள் அதிகரித்துள்ளன. ஆயினும் இரத்துச் செய்யப்பட்ட 62 ஆயிரம் கடன் அட்டைகளில் 150 கடன் அட்டைகள் இலங்கையில் மாத்திரம் பயன்படுத்தக் கூடியவை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏனைய அனைத்து அட்டைகளும் உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் பயன்படுத்தக்கூடியவை. ஒரு தொகை கடன் அட்டைகளை வங்கிகள் இரத்துச் செய்திருந்தாலும் 2021 ஒக்ரோபர் இறுதி வரையான காலம் வரை கடன் அட்டைகளுக்கு செலுத்தவேண்டிய தொகை 124.2 பில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது.

செலுத்த வேண்டிய இந்தத் தொகையானது கடந்த செப்ரெம்பர் மாதம் 121 பில்லியன் ரூபாவாக இருந்தது. கடந்த 2020ஆம் ஆண்டு இலங்கையில் பயன்படுத்தப்பட்ட கடன் அட்டைகளுக்கு செலுத்த வேண்டிய முழு தொகையானது 117 பில்லியன் ரூபாவாக இருந்தது.

கொரோனாத் தொற்றுநோய் காரணமாக ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் கடன் அட்டைகளுக்கு செலுத்த வேண்டிய தொகை செலுத்தப்படாமை மற்றும் இணையத்தளம் வழியாக செலுத்தும் முறை வரையறுக்கப்பட்டமை என்பன இவ்வாறு பெருந்தொகையான கடன் அட்டைகளை இரத்துச் செய்ய ஏதுவாக அமைந்தன என பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ஏ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## '13' ஐ....

யாழ். காங்கேசன்துறை வீதி யாழ்ப்பாணத்திலுள்ள அவரது கட்சித் தலைமை அலுவலகத்தில் நேற்று அவர் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
கொழும்பில் சில தமிழ்த் தேசியக் கட்சிகள் கூட்டங்களை நடத்துகின்றன. அதில் நாம் பங்கேற்காத நிலையில் அதற்கான காரணங்களை தெளிவுபடுத்த விரும்புகிறேன்.
30 வருடங்களுக்கும் மேலாக நடைமுறைப்படுத்த முடியாத 13ஆம் திருத்தத்தை சிலர் தமது எஜமானர்களைத் திருப்திப்படுத்துவதற்காக தமிழ் மக்களை ஒற்றையாட்சியின் கீழ் கட்டுப்படுத்தலாம் என முயற்சிக்கின்றனர்.
தமிழ்த் தேசிய அரசியலில் ஒரு வருடத்துக்குள் பெரும் சதி நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளன.
இந்தியா 13ஆவது திருத்தத்தை நிறைவேற்ற வேண்டும் என்பதில் உறுதியாக நிற்கும் நிலையில், சம்பந்தனும் இந்தியா வலியுறுத்துகின்ற 13ஆவது திருத்தத்தை ஏற்றாக வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளார்.
13ஆவது திருத்தத்தை தமிழ்த் தரப்புகள் சில ஆதரிப்பதன் மூலமாக சிங்கள மக்களுக்கு ஒரு செய்தி சொல்லப்படுகிறது. அதாவது, "சீனாவை விட்டு வாருங்கள் நாட்டை ஒற்றையாட்சிக்குள் ஆளலாம்" என்ற செய்தி சொல்லப்படுகிறது.
தற்போது 'ஒரே நாடு ஒரே சட்டம்' என்கிறார்கள். இப்போதாவது சமஷ்டியை பற்றி பேசவேண்டும், ஒற்றையாட்சியை எதிர்க்கிறோம் என கூற வேண்டும்.
ஆனால் இலங்கை அரசாங்கம் ஒற்றையாட்சியைக் கொண்டு வந்தால் எதிர்ப்போம் எனக் கூறுகின்றார்கள். 13 மூலம் இந்தியா கொண்டுவரும் ஒற்றையாட்சியை ஆதரிப்பவர்கள் பச்சைத் துரோகிகள்.
துரோகிகள் தொடர்பில் மக்கள் விழிப்பாக இருக்கவேண்டும். அவர்களை அரசியல் அரங்கிலிருந்து வெளியேற்றாவிட்டால் அதன் பிரதிபயன்களை மக்களே அனுபவித்துக்கொள்ள வேண்டும் - என்றார். (த-இ)

## தமிழர்களின்...

லான கலந்துரையாடல் ஒன்று, புதிய ஆளுநர் ஜீவன் தியாகராஜா தலைமையில் முதன்முதலாக உயர் அதிகாரிகள், திணைக்களத்தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எனப் பலருடைய பங்கேற்பில் நேற்று நடைபெற்றது. கைதடியில் உள்ள பிரதம செயலாளர் அலுவலகத்தில் இது நடைபெற்றது.
அதில் கலந்துகொண்ட ஆளுநர், பிரதம செயலாளர், அதிகாரிகள் என அனைவருமே சகல விடயங்களையும் தமிழ் மொழியில் மாத்திரமே கலந்துரையாடினர். தமிழ்மொழி பெயர்ப்பு ஏற்பாடுசெய்யப்பட்டிருக்கவில்லை. எனவே, கலந்துரையாடலில் பங்கேற்ற அனைவருக்கும் புரியும் வகையில், ஆங்கில மொழிபெயர்ப்பு வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் கலந்துரையாடலின்போது சுட்டிக்காட்டினார்.
எனினும், அவருடைய கோரிக்கை கவனத்தில் கொள்ளப்படாது, கலந்துரையாடல் தமிழ் மொழிபெயர்ப்பு இன்றி தொடர்ந்தும் ஆங்கில மொழியிலேயே நடைபெற்றுக்கொண்டிருந்தது.
இதனால் விசனம் அடைந்த நாடாளுமன்ற உறுப்பினர், "தமிழ் மக்களை கொண்ட மாகாணத்தில் தமிழ் மொழியே இல்லாத இத்தகைய கூட்டத்தில் தொடர்ந்தும் பிரசன்னமாகியிருக்க நான் விரும்பாத காரணத்தால் இந்தக் கூட்டத்திலிருந்து வெளியேறுகின்றேன்" எனத் தெரிவித்து அங்கிருந்து வெளியேறினார்.
இது தொடர்பில் அவர் ஊடகவியலாளருக்குக் கருத்து தெரிவிக்கையில், எமது போராட்டம் தொடக்கம் எமது மக்களின் அடிப்படை உரிமைகள் வரையில் எல்லாமே மொழி ரீதியானவை. இந்த மொழிக்காக பலரை இழந்தோம். அதேநேரம், தமிழ் மக்களுக்கான தனி மாகாணமாக தற்போது எஞ்சியிருக்கும் இந்த மாகாணத்தில் கோரிக்கை விடுத்தும் தமிழ் மொழிக்கு இடம் இல்லாதபோது இந்தக் கூட்டத்தில் எதற்காக பங்குகொள்ள வேண்டும்? - என்றார். (த-20)

## முகமாலையில்...

குறித்த பகுதி, தமிழீழ விடுதலைப் புலிகளும் படையினரும் நீண்டகாலமாக சமராடும் இடமாக விளங்கியது. வெடிபொருள்களும் அங்கு புதைக்கப்பட் டுள்ள நிலையில், மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் அகற்றும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.
இந்தநிலையில், கடந்த சனிக்கிழமை வெடிபொருள்களை அகற்றும்போது மண் அணைப்பகுதியிலிருந்து துப்பாக்கிகளும் எலும்புக்கூடுகளும் அடையாளம் காணப்பட்டன. அதனையடுத்து கண்ணிவெடியகற்றும் பணி இடைநிறுத்தப்பட்டு பொலிஸாருக்கும் இராணுவத்தினருக்கும் தகவல் வழங்கப்பட்டது. அதுமட்டுமன்றி, குறித்த பகுதி பொலிஸாரின் பாதுகாப்பின் கீழ் கொண்டுவரப்பட்டு, கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் குறித்த விடயம் அறிக்கையிடப்பட்டது.
இந்தநிலையில், நீதிவான், கிளிநொச்சி மருத்துவமனையின் சட்ட மருத்துவ அதிகாரி, பளை பொலிஸ் நிலையத்தின் உதவி பொலிஸ் பரிசோதகர், இராணுவத்தினர், ஹலோ ட்ரஸ்ட் நிறுவனத்தின் அதிகாரிகள் குறித்த இடத்தை நேற்றுப் பார்வையிட்டனர். இன்றுகாலை அங்கு அகழ்வுப் பணி மேற்கொள்வது என்று தீர்மானிக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (த-6)

## மத்திய...

னூடாக நாட்டுக்கு கிடைக்கும் வெளிநாட்டு நிதியை இலங்கை ரூபாவாக மாற்றுவதை கட்டாயமாக்கி இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரால் வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்யக்கோரி குறித்த மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
இலங்கை சட்டத்தரணிகளின் சங்கத்தின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் மற்றும் அந்தச் சங்கத்தின் பிரதி தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி அனுர மத்தேகொட ஆகியோர் குறித்த மனுவைத் தாக்கல் செய்துள்ளனர்.
மனுவின் பிரதிவாதிகளாக மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால், மத்திய வங்கியின் நாணய சபை, நிதி அமைச்சர் பசில் ராஜபக்ச வங்கி மற்றும் சட்டமா அதிபர் ஆகியோரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. (த-இ)

## இரண்டாவது...

வர்களில், ஒருவரின் சடலம் நேற்றுமுன்தினம் மீட்கப்பட்ட நிலையில், இரண்டாவது மீனவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டது. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இரண்டு மீனவர்களும் கடந்த ஞாயிற்றுக்கிழமை மதியம் காணாமற்போயிருந்தநிலையில், மீட்புப் பணி தொடர்ந்தபோதும் அவர்களை சடலங்களாகவே மீட்க முடிந்தது.
நேற்றுமுன்தினம் பருத்தித்துறையை சேர்ந்த தர்ஷன் (வயது-19) சடலமாக மீட்கப்பட்டிருந்தநிலையில், நேற்று அதே இடத்தைச் சேர்ந்த செந்தூரன் (வயது 28) சடலமாக மீட்கப்பட்டார்.
கடந்த ஞாயிற்றுக்கிழமை மதியம் மூன்று மீனவர்கள் கோந்தைப்பிட்டி கடலில் தமது படகை செலுத்தி தொழிலுக்குச் செல்ல சரி பார்த்தபோது மேலும் ஐவர் அதில் ஏறியுள்ளனர்.
இந்தநிலையில், குறித்த படகின் வெளி இணைப்பு இயந்திரம் திடீரென இயங்க மறுத்ததால், காற்றில் தள்ளாடியபடி படகு கடலில் சென்று கொண்டிருந்தது. இதன்போது படகின் முன் அணியத்தில் நின்ற ஒருவர் திடீரென கடலில் வீழ்ந்து கடல் நீரில் அடித்துச் செல்லப்பட, அவரைக் காப்பாற்ற மற்றையவரும் கடலில் குதித்துள்ளார். எனினும், குறித்த இருவருமே கடல் நீரில் இழுத்துச் செல்லப்பட்டிருந்தனர். இந்த நிலையில் அவர்கள் தற்போது சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர். (த-56)

## யாழ்ப்பாணத்தில்...

வாயு அடுப்பு வெடித்துச் சிதறியது என்று தெரிவிக்கப்பட்டது.
எனினும், எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. இதேவேளை, வடமராட்சி துன்னாலை பகுதியில், வீடு ஒன்றிலும் நேற்று எரிவாயு அடுப்பு வெடித்துச் சிதறியது என்று தெரிவிக்கப்பட்டது.
கொழும்பு பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகக் கடமையாற்றும் ஒருவரது வீட்டில் இந்த வெடிப்பு இடம்பெற்றது.
மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஆனைக்கோட்டை உயரப்புலம் பகுதியிலுள்ள வீடு ஒன்றிலும் நேற்று இரவு எரிவாயு அடுப்பு வெடித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.
குறித்த சம்பவம் தொடர்பாக மானிப்பாய் பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். (த-27,26,125)

## காய்ச்சலால்...

ழுந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.
கிருஷ்ணபுரம் கிளிநொச்சிப் பகுதியைச் சேர்ந்த மனோரஞ்சன் தேவிகா (வயது - 37) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார். கடந்த 7ஆம் திகதி அவர் காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்தார். இந்தநிலையில், 11 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டு 13ஆம் திகதி மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டிருந்தார். எனினும், இந்தநிலையில், சிகிச்சை பயனளிக்காது அவர் நேற்றிரவு உயிரிழந்தார். மருத்துவமனையில் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேமகுமார் இறப்பு விசாரணையை மேற்கொண்டார். உடற்கூற்றுப் பரிசோதனைக்கு சடலம் மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. (த-25,26)

## துப்பாக்கியுடன்...

றோ ரக கைத்துப்பாக்கி மற்றும் 2 மகசின்கள் மீட்கப்பட்டன என்று தெரிவித்த பொலிஸார், அவற்றை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவரை நேற்றுக் கைதுசெய்துள்ளனர்.
இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் விடுதலைப்புலிகளினால் பயன்படுத் தப்பட்டதாக நம்பப்படும் வெளிநாட்டுத் தயாரிப்பான மைக்ரோ 9 எம்.எம். கைத்துப்பாக்கியே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.
காரைதீவு கொம்புச்சந்திக்கருகாமையில் உள்ள வீடொன்றில் பொலிஸ் குழுவினர் தேடுதலை மேற்கொண்டு இந்த கைத்துப்பாக்கி மற்றும் மகசின்களை மீட்டுள்ளனர்.
அந்த வீட்டினுள் குறித்த துப்பாக்கியை தம்வசம் வைத்திருந்தார் என்று குற்றஞ்சாட்டி 44 வயதுடைய ஒருவரை சம்மாந்துறை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.
மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் மேற்கொண்டு வருகின்றனர். (த-இ)

## யாழ்.மாநகர....

பெரும் பரபரப்புக்கு மத்தியில் சபையில் இன்று முன்வைக்கப்படவுள்ள நிலையில், குறித்த பாதீட்டுக்கு ஆதரவளிப்பதில்லை என்று, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்று முடிவெடுத்துள்ளது.
இது பற்றிய கூட்டம் ஒன்று, யாழ்ப்பாணம் மார்ட்டீன் வீதியிலுள்ள கட்சி அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.
அதன்போது, மணிவண்ணன் அணி தலைமையிலான பாதீட்டுக்கு ஆதரவளிப்பதா இல்லையா என்பது பற்றிக் கருத்துக் கேட்கப்பட்டது.
ஒரு சிலர் ஆதரவளிப்பது என்று கூறினர். எனினும், பெரும்பான்மையானோர், ஆதரவளிக்கக்கூடாது என்று கூறியமையால், பாதீட்டுக்கு ஆதரவளிப்பதில்லை என்று இறுதி முடிவு எடுக்கப்பட்டது.
அதேநேரம், பாதீட்டுக்கு கூட்டமைப்பு ஆதரவளித்தால் தாம் ஆதரவளிக்கப் போவதில்லை என்றும், கூட்டமைப்பு ஆதரவளிக்கவில்லையெனில், தாம் ஆதரவளிப்போம் என்றும் ஈ.பி.டி.பியினர் நேற்று நடத்திய கூட்டத்தில் முடிவெடுத்துள்ளனர் என்று அறியமுடிகின்றது. அதன்படி, பாதீட்டை கூட்டமைப்பு எதிர்க்கவுள்ளதால், ஈ.பி.டி.பி. பாதீட்டுக்கு ஆதரவளிக்கவுள்ளது.
அதுமட்டுமன்றி, ஐ.தே.கவில் ஒருவரும். சு.கவில் இருவரும் பாதீட்டுக்கு ஆதரவளிக்கவுள்ளனர் என்றும் கூறப்படுகின்றது.
சுயேச்சைக் குழுவின் பெண் உறுப்பினர் இன்னும் முடிவெடுக்கவில்லை என்று அறியமுடிந்தது.
இதேவேளை, கூட்டமைப்பின் சிலரும் ஐ.தே.கவில் இருவரும் பாதீட்டின் போது நடுநிலை வகிக்கலாம் அல்லது வெளியேறலாம் என்று ஊகிக்கப்படுகின்றது.
யாழ்.மாநகர சபையில் 45 உறுப்பினர்கள் உள்ளனர். பாதீட்டுக்கு ஆதரவளிப்பதா இல்லையா என்பதில் உறுப்பினர்கள் சிலர் இன்னும் முடிவு எடுக்காமையால், சபையில் பாதீடு மீதான வாக்கெடுப்பு நடைபெறும் வரை அதன் முடிவு குறித்து பரபரப்பான நிலைமையே நீடிக்கின்றது. (த-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாநகரசபை பாதீடு தோற்கடிக்கப்பட்டால் பெருந்தேசியவாதத்துக்கே வெற்றி!

## எச்சரிக்கின்றார் ஜோதிலிங்கம்



**யாழ்ப்பாணம், டிசெ. 15**

**யாழ். மாநகர சபையின் வரவு - செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டால் பெருந்தேசியவாதத்தினுடைய நிகழ்ச்சி நிரல் இங்கே மேடையேறுவதற்கான வாய்ப்புக்கள் ஏற்படும் - என்று, சமூக - விஞ்ஞான ஆய்வு மையத்தைச் சேர்ந்தவரும், அரசியல் ஆய்வாளருமான சி.ஆ.ஜோதிலிங்கம் தெரிவித்தார்.**

யாழ். ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், சிங்கள தரப்புக்கு கை மாறக்கூடிய வகையில் இருக்கின்ற பிரதேசசபை களிலே தமிழ்க் கட்சிகள் ஒருங்கிணைந்து கவனமாகச் செயற்பட்டிருக்க வேண்டும். ஆனால் அவர்களோ அந்தப் பொறுப்பை உதாசீனம் செய்துள்ளனர்.

யாழ்ப்பாண மாநகர சபையின் வரவு செலவுத்திட்டம் இன்று விவாதத்துக்கு வர இருக்கின்றது. அதை தோற்கடிப்பதற்கான முயற்சிகள் இடம்பெறுகின்றன - என்று செய்திகள் வெளியாகி இருக்கின்றன.

கட்சி மற்றும் அரசியல் ரீதியான முரண்பாடுகளை மாநகரசபை நிர்வாகத்தின்கீழ் கொண்டு வருவதற்கு கட்சிகள் முயன்று கொண்டிருக்கின்றன.

மாநகர சபை கலைக்கப்பட்டால் அது, மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டால், தமிழ் மக்களின் கை விலகுவதோடு ஏற்கனவே வடக்கை நோக்கி பெரும் தேசியவாதம் தன்னுடைய நிகழ்ச்சிநிரலை நடத்துவதற்கு முயற்சிக்கின்ற செயற்பாடு மேலும் துரிதம் அடையக் கூடிய அபாயம் ஏற்படும்.

மாநகர சபையின் செயற்பாடுகளில் பல தடங்கல்கள் ஏற்படும். அதனுடைய நிதிக் கொடுக்கல் வாங்கல்கள் மட்டுமல்ல அபிவிருத்தி செயற்பாடுகள் பாதிக்கப்படுகின்ற சூழல் உருவாகும்.

ஆகவே, அரசியல் கட்சிகளிடம் நாங்கள் வினயமாக கேட்டுக்கொள்வது, தமிழ்த் தேசியத்தை கட்டியெழுப்பும் செயற்பாடுகளிலே உங்கள் கட்சி அரசியலை செய்ய வேண்டாம். வரவு - செலவுத்திட்டத்தில் திருத்தம் செய்ய வேண்டுமாக இருந்தால் அந்தத் திருத்தத்தை கொண்டு வாருங்கள் - என்றார்.

**'13' முழுமையாக வேண்டும்**

பதின்மூன்றாம் திருத்தம் தொடர்பாக கேள்வி எழுப்பிய பொழுது, 13ஆம் திருத்தத்தை அரசியல் தீர்வாகவோ அல்லது முதற்படியாகவோ என அரசியல் கட்சிகள் கூறுவதை விடுத்து, இலங்கை அரசாங்கம் 13ஆம் திருத்தத்தை முழுமையாக நல்லெண்ண அடிப்படையில் நடைமுறைப்படுத்தவேண்டும் என்ற கோரிக்கையை அரசியல் கட்சிகள் முன்வைக்க வேண்டும். இந்தியாவிடம் தமிழ் மக்களுக்கு என்ன தேவை என்பதை அரசியல் கட்சிகள் உறுதியாக வலியுறுத்த வேண்டும் - என்றார்.

(த-20)


### கட்டட இடிபாடுகள் தேவை

பழைய கட்டடம் அல்லது கட்டட இடிபாடு 2000 கியூப் உடன் தேவை

**076 8936 169**

(CS 877 A) (1-6)

### கட்டட ஒப்பந்தகாரர் தேவை

வடமராச்சிப் பகுதியிலுள்ள அரச வேலைத்தளங்களுக்கு உப கட்டட ஒப்பந்தகாரர் உடன் தேவை.

**076 893 6169**

(CS 877 B) (1-6)

### சிறுநீரகம் தேவை

A+ குருதி வகை உடைய நபருக்கு சிறுநீரகம் தேவை.

077 822 9982, 076 449 4807

whatsapp - +447713940798

### காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் மயிலிட்டி B.C.றோட், சாந்த சந்தி அருகாமையில் மெயின் றோட்டுடன் 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

Call: **076 8909 259**
**077 0150 353**

(CS 863 B) 1-6

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் ஊரெழு பிள்ளையார் கோயில் வடக்கு வீதியில் 1 1/2 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.

1 பரப்பின் விலை - 12 லட்சம்

(லங்கா பாம் அருகாமை) **077 6585 999**
**077 6234 204**

(CS 873) 1-6

### வேலையாட்கள் தேவை

யாழ் நகரில் இயங்கும் Gift (கிப்ற்) சென்ரருக்கு

1. **Graphics Designer** (கிராபிக் டிசைனர்) Photoshop, CorelDraw முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
2. விற்பனையாளர்கள் (பெண்கள்) அனுபவம் உள்ளவர்கள், இல்லாதவர்கள்.

**077 4939 799**
**077 210 5286**

(CS 878) 1-6

### உதவி விற்பனை முகாமையாளர் தேவை

**சுன்னாகத்தில் இயங்கி வரும் பிரபல்யமான காட்சியறை** ஒன்றிற்கு உதவி விற்பனை முகாமையாளர் தேவை. உயர்தரத்தில் **வர்த்தகம், கணித பாடங்களில் சித்திபெற்றவர்கள், கணினியைக் கையாளக் கூடியவர்கள்** விரும்பத்தக்கது.

**கடமைகள்:** Sales, Billing, Account

**071 818 6803**

(cs.41610) (2.6)

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சுன்னாகம் கந்தரோடை பகுதியில் கணக்கர் வளவு 4 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. (நிலப்பரப்பு) 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடி பாதையுடன்.

சுன்னாகம் பஸ் நிலையத்தில் இருந்து **800 m** தூரம்.

பார்வையிடும் நேரம்: காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை

(தரகர் தேவையில்லை)

விலை நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: **077 814 7389**
**070 705 1655**

(CS 41603) 1-6


# மரண அறிவித்தல்



## சின்னத்தம்பி சிவசோதி

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் நல்லூரடியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சிவசோதி கடந்த 12.12.2021 அன்று காலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமுத்து - ஞானசௌந்தரி தம்பதியரின் கனிஷ்ட புதல்வியும், காலஞ்சென்ற வல்லிபுரம் சின்னத்தம்பி அவர்களின் அன்பு மனைவியும், திருமதி நல்லம்மா மற்றும் காலஞ்சென்றவர்களான அன்னப்பிள்ளை, சாமுவேல், பூரணம், சிவலிங்கம், பாக்கியம் ஆகியோரின் சகோதரியும், திரு. சிறிதரன் (சுவிஸ்), திருமதி செல்வராணி (நல்லூர்), திரு.கிருபாகரன் (ஜேர்மனி), திரு. தயாபரன் (சுவிஸ்), திருமதி லலிதாகுமாரி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி பத்மரூபி (சுவிஸ்), காலஞ்சென்ற பிரபாகரன் (நல்லூர்), திருமதி வனஜா (ஜேர்மனி), திருமதி தமயந்தி (சுவிஸ்), திரு. தயாசங்கர் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், டிலக்சன், நிவேதனா (நல்லூர்), சாருஷ், ஜிவானி (லண்டன்) ஆகியோரின் அம்மம்மாவும், நிலவன், மிதுலன் (சுவிஸ்), கிஷாந், அக்ஷயா (ஜேர்மனி), சானுகா, சாரகன் (சுவிஸ்) ஆகியோரின் அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.12.2021) புதன்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 10.00 மணிக்கு நடைபெற்று, நண்பகல் 12 மணிக்கு தகனக்கிரியைக்காக பூதவுடல் யாழ்ப்பாணம் கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**52/2, வைமன் வீதி,**
**நல்லூர், யாழ்ப்பாணம்**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**076 466 0806**

(cs.41611) (2.6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.12.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.